மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children's Voices for Human Rights



https://www.savethechildren.net/sites/default/files/stc-img-1.jpg

# புதிய தேசிய கல்விக் கொள்கை உருவாக்கல்

– ச.சீ.இராஜகோபாலன்

புதிய தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கிடும் முயற்சியில் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ஈடுபட்டுள்ளது. மக்கள் கருத்தை அறிந்திட வினாக்கள் கொண்ட அறிவிக்கை ஒன்றினை அதன் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. மக்கள் கருத்து கேட்க முற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அறிவிக்கையில் இன்றைய நிலை பற்றி தீர்க்கமான விவாதம் ஏதுமில்லை. அரசின் கல்வி நோக்கங்களும் தெரிவிக்கப்படவில்லை. அவற்றின் அடிப்படையில்தானே கல்விக் கொள்கை அமையும். மனிதவள மேம்பாட்டு அமைச்சர் பொறுப்பேற்றது முதல் பேசி வரும் பேச்சுகளும் நடைமுறைகளும் நம்பிக்கையளிப்பவையாக இல்லை. இதற்கு முன்னர் தேசியக் கல்விக் கொள்கை வகுக்கப்பட்ட வரலாற்றைத் திருப்பிப் பார்ப்பது பயனுடையதாக இருக்கும்.

விடுதலைக்கு பின் மூன்று முக்கியக் குழுக்கள் அமைக்கப்பட்டன. 1948ல் பல்கலைக்கழகக் கல்வி பற்றி ஆய்ந்திட டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் தலைமையிலும், 1956ல் இடைநிலைக் கல்வி பற்றி அறிக்கை அளிக்க டாக்டர் ஏ.இலஷ்மணசாமி முதலியார் தலைமையிலும், அனைத்துநிலைக் கல்வி பற்றி விரிவான அறிக்கை வேண்டி டாக்டர் டி.எஸ்.கோத்தாரி தலைமையிலும் அமைக்கப்பட்டக் குழுக்களில் நம் நாட்டுக் கல்வியாளர்கள் தவிர உலகப் புகழ் பெற்ற பன்னாட்டுக் கல்வியாளர்களும் உறுப்பினர்களாக இருந்து காய்தல், உவத்தலின்றி நாட்டின் கல்வி நலம் சிறந்தோங்க சீரிய பரிந்துரைகளை அளித்தனர். மூன்று அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டன. கோத்தாரி கல்விக் குழு தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுதுடன் அதற்கான வரம்புகளையும் எடுத்துரைத்தது.

அதன் அடிப்படையில் முதல் தேசியக் கல்விக் கொள்கை 1968ல் நாடாளுமன்றம் இயற்றியது. அன்று நாட்டின் நடுநாயகப் பிரச்சனையாக இருந்த தேசிய ஒருமைப்பாட்டினை மையப்படுத்தியும், அரசியல் சட்டம் வலியுறுத்திய மதச் சார்பின்மை, அறிவியல் மனப்பான்மை, சமநீதியின் அடிப்படையிலும் அக்கொள்கை அமைந்தது. ஒருமைப்பாட்டைக் குலைப்பது மதவெறியே. ஆனால் அக்கொள்கை வலியுறுத்திய மும்மொழித் திட்டம் ஒருமைப்பாட்டினைக் கொணராது என்பது போகப் போகத் தெரிய வந்தது. நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பின் கல்வி மாநிலப் பட்டியலினின்று பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பிரிவினைவாத சக்திகளுக்கு கல்வியின் மீதுள்ள பிடியைத் தளர்த்தவே இம்முடிவு என்று ஐயப்பட காரணங்கள் உண்டு.

1984ல் ஆட்சிக்கு வந்த ராஜீவ் காந்தி இந்தியாவை உலக அளவில் அறிவு வல்லரசாக்க வேண்டும் என்று விரும்பினார். நமது கல்விமுறை இப்பணியினைச் செய்யுமா என்று ஐயப்பட்டார். விடுதலைக்குப் பின் கல்வியின் நிலையை ஆய்ந்திட அமைக்கப்பட்ட குழு, மேயோ இந்தியா பற்றி எழுதிய நூலைப் போன்றே இந்தியக் கல்விமுறையின் தோல்விகளைப் பட்டியலிட்டு விடுதலைக்குப் பின் எந்த முன்னேற்றமும் இல்லை என்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உண்டாக்கியது.

**அரசியலில் இருந்து கல்வியை முழுமையாகப் பிரிக்க முடியாது. அதே சமயம், அதன் வீச்சைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளை உள்ளடக்கியதாகக் கல்விக் கொள்கை இருக்க வேண்டும்.**

கல்விக்குச் சவால் என்ற அவ்வறிக்கை வெளிப் படையாகத் தோல்விகளை ஏற்றதற்காக பாராட்டப் பெற்றது. அதன் முதல் பிரதியைப் பெறவும், தொடர்ந்து நடைபெற்ற தொலைக்காட்சி விவாதத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பினையும் நான் பெற்றேன். அவ்வறிக்கையின் அடிப்படையில் அமைந்த 1986 தேசிய கல்விக் கொள்கை அரசால் அனைவர்க்கும் கல்வி அளிக்க இயலாதெனவும், பகுதி நேரப் பயிற்சி பெறாத ஆசிரியர்களைக் கொண்டு பள்ளி செல்லாக் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கவும், பள்ளிகள் சீறாக நடைபெறுவதை உறுதி செய்ய ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் இயங்க வேண்டுமென்றும் பரிந்துரைத்தது. மேலும் பள்ளிகளில் புதிய தொழில்நுட்ப வசதிகள் கொண்டு கற்பித்தலை மேம்படுத்தவும் வலியுறுத்தியது. ஆட்சி மாறியதும்

இக்கொள்கையினைச் சீரமைக்க முடிவெடுக்க ஆச்சார்யா இராமமூர்த்தி தலைமையில் ஒரு குழு 1989ல் அமைக்கப்பட்டது. கல்வி அளிப்பில் அரசின் பங்கினைத் தட்டிக் கழிக்க முற்படுத்தக்கூடாதென்று கருதிய குழு பொதுப் பள்ளிகளை மேம்படுத்த வலியுறுத்தியது. 1989 தேசியக் கல்விக் கொள்கை அதிக மாற்றமில்லாது அமைந்தது.

1991ல் உலகவங்கியின் முன்முயற்சியில் ஐ.நா.வின் துணை நிறுவனங்களுடன் இணைந்து அனைத்து நாட்டுத் தலைவர்களும் ஜோம்டியான் நகரில் கூடி 2000–க்குள் அனைவர்க்கும் கல்வி பிரகடனம் வெளியிடப்பட்டது. இது ஐந்தாம் வகுப்பு வரையிலேயே கட்டாயக் கல்வி என்ற ஒரு நீர்த்தக் கல்வித் திட்டம். அதே சமயத்தில் நரசிம்மராவ் அரசிற்கு வெளியிலிருந்து ஆதரவு கொடுத்து வந்த இடதுசாரி அமைப்புகள் உன்னிகிருஷ்ணன் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்பை செயல்படுத்த வற்புறுத்தின. அவற்றின் விளைவு 1992 தேசியக் கல்விக் கொள்கை.

இவற்றினின்று அறிவது ஒவ்வொரு தேசியக் கல்விக் கொள்கையும் ஒரு உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. இம்முறை எக்குழுவும் அமைக்கப்படாது, தன்னிச்சையாக நடுவணரசு இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது வியப்பிற்குரியதல்ல. பல கொள்கை முடிவுகளும் வல்லுநர் குழுக்கள் அமைத்து அறியாதே எடுக்கப்படுவதுடன் அனைத்து கல்வி, கலாச்சார அமைப்புகளுக்கும் இந்துத்வா தொடர்புடையவர்களைத் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் நியமித்து வருகின்றது.

அரசு தன் மனதைத் திறந்து காட்டாத பொழுது கடந்த ஓராண்டில் அரசு, முக்கியமாக மனிதவள மேம்பாட்டு அமைச்சரின் பேச்சுகளும், செயல்பாடுகளும்தான் நமக்கு வெளிச் சத்தைத் தருவன. அவற்றைப் பார்க்குங்கால் அச்சமும் கவலையும் தான் நம்மை மேற்கொள்கின்றன. பிள்ளையார், கன்னித்தாய் போன்றவற்றிற்கு பிரதமர் அளித்த அறிவியல் விளக்கங்களும் நம் மாணவரை சிந்திக்கும் திறனற்றவர்களாக உருவாக்கிவிடுமோ என்று ஐயுறத் தோன்றுகின்றது. இந்துத்வா கண்ணோட்டத்தில் வரலாறும் கற்பிக்கப்படும். கல்விக் கொள்கையைவிட கல்வியின் உள்ளடக்கத்தில் செய்யப்படும் மாற்றங்கள் அரசியல் சட்டம் கூறும் அறத்திற்கு முரண்பட்டு இருந்தால் வியப்பில்லை. கல்வி, பொதுப்பட்டியலில் இருப்பதால் மாநில அரசு அதனின்று வேறுபட நிறைந்த உறுதி வேண்டும்.

கிராம நிலையினின்று தேசிய அளவில் விவாதங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர் வெளியிடப்படும் கல்விக் கொள்கை மக்களின் விருப்பங்களை அடியொற்றித் தான் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறினால் அதை மறுக்க முடியுமா? கருத்துக்கோரல் என்ற பெயரில் விடுக்கப்பட்டுள்ள வினாக்கள் ஏனோ தானோ என்ற முறையில் அமைந்துள்ளன. சில வினாக்கள் எதிர்பார்க்கும் விடையை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றன. முதல் கேள்வியே உங்கள் குழந்தையின் தரமற்ற செயல்பாட்டிற்குக் காரணம் என்ன என்பதுதான்.

குழந்தையின் செயல்பாடு தரமற்றது என்று முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதையே காட்டுகின்றது. மற்றொரு கேள்வி, இரண்டாம் வகுப்புகளுக்கு அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்கள் தேவையா எனும்பொழுது மற்ற வகுப்புகளின் ஆசிரியர்களுக்கு அர்ப்பணிப்பு தேவையில்லையோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. தொடக்க நிலையில் எத்தனை மொழிகளை வழங்கலாம் என்றால் ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகள் வழங்கலாம் என்ற நினைப்பு வெளியிடப்படுகின்றது.

தொடக்கக்கல்வியில் சர்வ தேசக் கூட்டுறவிற்கு சாத்தியமுள்ள கூறுகள் யாவை என்ற வினா அன்னிய முதலீட்டை வரவேற்கும் எண்ணம் இருப்பதை வெளிப்படுத்துகின்றது. தனியார்–பொதுத் துறைக் கூட்டுறவுக்கான சாத்தியக்கூறுகள் என்ன என்ற வினாவிற்கும் அத்தகைய கூட்டுறவை அரசு விரும்புவதாகத் தெரியப்படுத்துகின்றது.

பத்தாம் வகுப்புத் தேர்வு ரத்து கற்றல் தரத்தைக் குறைத்துள்ளதா என்ற வினா மீண்டும் தேர்வைக் கட்டாயப்படுத்த வேண்டும் என்ற அரசின் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றது. அரசியலில் இருந்து கல்வியை முழுமையாகப் பிரிக்க முடியாது. அதே சமயம், அதன் வீச்சைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளை உள்ளடக்கியதாகக் கல்விக் கொள்கை இருக்க வேண்டும்.

மாநிலங்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும். நெருக்கடி காலத்தில் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொணர வேண்டும். முந்தைய தேசியக் கல்விக் கொள்கைகளும், கல்வி உரிமைச் சட்டமும் தரும் பாடம் வேறுபாடுகள் நிறைந்த நம் நாட்டில் நாடு முழுமைக்கும் ஒரே கல்விக் கொள்கை எப்பயனையும் தராது என்பதே ஆகும்.

**நன்றி: புதிய ஆசிரியன்.**

# புதிய கல்விக் கொள்கையைக் கட்டுடைத்தல்

-டாக்டர். நிரஞ்சனாராத்யா

"கல்வி என்பது ஒரு திணிக்கப்பட்ட அறியாமை ஏற்பாடுதான்'' என்கிறார் நோம் சோம்ஸ்கி. புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதில் மத்திய அரசின் அணுகுமுறை இப்படித்தான் இருக்கிறது. புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவது குறித்து விவாதிப்பதன் ஒரு பகுதியாக மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் சில ஆவணங்களை இணையத்தில் பதிவேற்றியுள்ளது. ஆனால், அந்த ஆவணங்கள் ஒரு "விவாதத்திற்கான அறிக்கைக்குரிய'' வடிவத்தில் இல்லை. அமைச்சகம் வெளியிட்டுள்ள "புதிய கல்விக் கொள்கை'' என்ற தலைப்பிலான ஆவணத்தில், 'இணைப்பு –1' என்ற பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

"பள்ளிக் கல்வி தொடர்பான கொள்கை ஆலோசனைக்கான கருத்துகளும் கேள்விகளும்'' என்ற தலைப்பில் அந்த இணைப்பு சேர்க்கப்பட்டுள்ளது. (http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/Themes_questions_SE.pdf) ஆவணத்தை கவனமாக ஆராய்ந்து பார்த்தால் அரசமைப்பு சாசன மதிப்புகளின் அடிப்படையிலோ, 1968, 1986 ஆகிய ஆண்டுகளின் கல்விக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டோ, 1992ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டோ உருவாக்கப்பட்ட எந்தவொரு கோட்பாட்டு அம்சங்களும் அதில் இல்லையென்பது தெரியவருகிறது. அந்தக் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் இருந்த பலம், பலவீனம் ஆகியவற்றைக் கண்டறிந்ததாகவோ, அதனடிப்படையில் எதிர்காலத் திட்டத்தை வகுப்பதற்கான ஆலோசனையை முன்வைப்பதாகவோ அது இல்லை என்பதும் தெரியவருகிறது. முந்தைய கொள்கைகள், அருகமைப் பள்ளி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பொதுப்பள்ளி முறை என்பதைச் சார்ந்து ஒரு தேசிய கல்விமுறையைக் கட்டுவது என்பதை உறுதிப்படுத்துவதற்கான அரசமைப்பு சாசன மதிப்புகளில் உருவாக்கப்பட்டன என்பது நமக்குத் தெரியும். இது பெரும் மதிப்பைப் பெற்ற கல்வி ஆணையம் (கோத்தாரி ஆணையம்) பரிந்துரைத்ததன் அடிப்படையிலும், தேசிய கல்விக் கொள்கையை (NEPRC) ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுவால் எடுத்துரைக்கப்பட்டதன் அடிப்படையிலும் இது உருவாக்கப்பட்டது.

ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகளும், எழுப்பப்பட்டுள்ள கேள்விகளும் ஒரு புதிய கல்விக் கொள்கைக்கான கண்ணோட்ட அறிக்கை எதையும் முன்வைக்கவில்லை. கல்வி என்ற களத்தில் தற்போது நிலவுகிற ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள், சமத்துவமற்ற நிலைமைகள் ஆகியவற்றை இந்த ஆவணங்கள் கருத்தில் கொள்ளவில்லை. கல்வித்துறை தனியார்மயமாக்கப்படுவது, வர்த்தகமயமாக்கப்படுவது, கல்வி ஒரு விற்பனைச் சரக்காக மாற்றப்படுவது ஆகிய பிரச்சனைகள் குறித்தும் இந்த ஆவணங்கள் ஆராயவில்லை. ஒரு பக்கத்தில் கல்விக்கான வாய்ப்பு, நிலையானதன்மை, தரம் ஆகியவற்றிலும், இன்னொரு பக்கத்தில் கல்வியின் உள்ளடக்கங்கள், ஆசிரியர் கல்விக்கான அளவுகோல்கள், வாய்ப்புகளில் சமநிலை ஆகிய அம்சங்களிலும், அனைத்திற்கும் மேலாக எதிர்காலத்தில் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காக அரசமைப்பு சாசனத்தின் முன்னுரையில் பொறிக்கப்பட்டுள்ள அடிப்படையான மாண்புகளை நிலைநாட்டுவதற்கான சமூக நீதி ஆகிய அம்சங்களிலும் தற்போதைய கல்விமுறை எதிர்கொள்கிற அடிப்படையான பிரச்சனைகளை கையாள்வதற்கு, "எத்தகைய தேசிய கல்விமுறையைக் கட்டமைப்பது'' என்ற மையமான கேள்விக்கு விடையளிப்பதற்கான கண்ணோட்டமெதுவும் தற்போதைய ஆவணங்களின் கருத்துகளிலும், கேள்விகளிலும் இல்லை.

பள்ளிக்கல்விக்கான கொள்கைக் கலந்தாய்வு ஆவணத்தில் பள்ளிக் கல்வித் தொடர்பான 13 தலைப்புகளில் கருத்துகள் கூறப்பட்டுள்ளன. அத்துடன், எதிர்பார்க்கப்பட்ட பதில்களைக் கோரும் கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றை கவனமாக ஆராய்ந்தால் கல்வியைத் தனியார்மயமாக்குதல், கல்வியில் அரசு – தனியார் கூட்டு (PPP) ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கு ஏற்ற திட்டவட்டமான பதில்களை வரவழைக்கும் வகையிலேயே கேள்விகள் தயாரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதைத்தான் "உள்ளடக்க உற்பத்தி'' என்ற பிரபலமான வார்த்தைகளால் குறிப்பிட்டார் நோம் சோம்ஸ்கி. நவீன தாராளமய செயல்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக இவ்வாறு "உள்ளடக்க உற்பத்தி'' செய்யப்படுகிறது என்றார் அவர்.

எடுத்துக்காட்டாக, 'தொடக்கக் கல்வியில் கற்றல் திறன்களை உறுதிப்படுத்துதல்' என்ற முதலாவது தலைப்பின் கீழ் "பள்ளிகளில் உங்கள் குழந்தைகளின் செயல்பாடு மோசமாக இருப்பதற்கான காரணங்களாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்,'' என்ற கேள்வி

வைக்கப்பட்டுள்ளது (பக்கம் 4). அரசுப் பள்ளிகள் மோசமாக செயல்படுகின்றன என்ற கருத்தை முன்கூட்டியே உருவாக்கிக்கொண்டு இந்தக் கேள்வி வைக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களிடமிருந்தும், விரிவான சமூகக் களத்திலிருந்தும் அரசுப் பள்ளிகள் சரியாக செயல்படவில்லை என்ற குறிப்பான பதிலை வரவழைக்கும் வகையில், அடிப்படையில் ஆசிரியர்களைக் குறிவைக்கிற வகையில் இந்தக் கேள்வி உருவாக்கப்பட்டுள்ளது. 'நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் செயல்பரப்பை விரிவுபடுத்துதல்' என்ற தலைப்பின் கீழ் அரசு –தனியார் கூட்டை நேரடியாக முன்மொழியக்கூடிய குறிப்பான கேள்வி கேட்கப்பட்டுள்ளது. "இந்த மட்டங்களில் பள்ளிக் கல்வியை விரிவுபடுத்த அரசு – தனியார் கூட்டு " என்பது பயனுள்ளதாக இருக்குமா," என்பதே அந்தக் கேள்வி (பக்கம் 6).

மிகவும் கவலையளிக்கும் அம்சம் என்னவெனில், இந்த ஆவணத்தின் பல இடங்களில், ஆசிரியர்களின் செயல்பாட்டை மதிப்பிடும் கேள்விகள் திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டுள்ளன என்பதுதான். "செயல்படு அல்லது அழிந்து போ" என்ற கோட்பாட்டை திணிக்க முயலும் உலக வங்கி மற்றும் கார்ப்பரேட் உலகத்தின் செயல்திட்டத்தை வற்புறுத்தும் வகையிலேயே அந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. பகுதி நேர ஆசிரியர்களையும், ஒப்பந்தமுறை ஆசிரியர்களையும் புறவாசல் வழியாக கல்விமுறைக்குள் கொண்டுவருவதே அந்த செயல்திட்டம். அதற்காக நமது அரசமைப்பு சாசனத்தின் உள்ளார்ந்த கோட்பாடாகிய சமூகப் பாதுகாப்பு என்ற கருத்தாக்கமே ஒழித்துக்கட்டப் படுகிறது.

ஒட்டுமொத்தத்தில், இந்த ஆவணத்தை மிகக் கவனமாக ஆராய்கிறபோது, கல்விமுறையை சந்தை சக்திகளுக்குத் திறந்துவிடுகிற, பள்ளிகளை நிர்வகிப்பதில் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களைக் கொண்டுவருகிற திட்டமிட்ட முயற்சியாகவே மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. சமத்துவம், சமூக நீதி, சமநீதி ஆகிய அரசமைப்பு சாசனத்தின் மையமான லட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய கல்விக் கொள்கை குறித்த ஒரு விவாதத்திற்கான தளத்தை அமைப்பதற்கான தொலைநோக்கு இந்த ஆவணத்தில் இல்லை. இந்திய அரசமைப்பு சாசனத்தின் முன்னுரையில் பொறிக்கப்பட்டுள்ள முற்போக்கான, மதச்சார்பற்ற, அறிவியல்பூர்வமான, ஜனநாயகப்பூர்வமான மாண்புகளை அப்புறப்படுத்தி விட்டு அந்த இடத்தில் பழமைவாத சிந்தனைகளையும் கொள்கைகளையும் நிலைநிறுத்துகிற விரிவான செயல் திட்டம் மத்திய அரசுக்கு இருப்பதை எவர் ஒருவரும் கண்டறிய முடியும். புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவது என்ற கண்ணோட்டத்தில் பின்வரும் கேள்விகளை எழுப்பி அவை குறித்த விவாதங்களை நடத்தவேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டிருக்கிறது:

1. அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துகிற அருகமைந்த பொதுப்பள்ளி என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசியக் கல்வி முறையைக் கட்டமைப்பதற்கான அடித்தளமாக எது இருக்க வேண்டும் ?
2. கல்வியை ஒரு சமுதாய உடைமையாகக் கருதுவதற்கு மாறாக, தற்போது நடைபெறும் தனியார்மயமாக்கல், வர்த்தகமயமாக்கல், கல்வியை விற்பனைச் சரக்காக்குதல் என்ற போக்கை எவ்வாறு நாம் எதிர்கொள்வது ?
3. தனது குடிமக்கள் அனைவருக்கும் சமூக நீதியை உறுதிப்படுத்துகிற அரசமைப்பு சாசனத்தின் மையமான மாண்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மனித நேயம் மிக்க, சமத்துவமான சமுதாயத்தைக் கட்டுவதற்கு கல்வி முறை எப்படி உதவ முடியும் ?
4. பன்மைத்துவம், பல மொழிகள், பல மதங்கள், பல பண்பாடுகள் என்ற உள்ளடக்கத்தில் குடிமக்கள் அனைவரிடையே மத நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பள்ளிகளில் எப்படிப்பட்ட உள்ளடக்கங்கள் கற்பிக்கப்பட வேண்டும் ?
5. தேசத்தின் எதிர்பார்ப்புகளை பிரதிபலித்த விடுதலைப் போராட்டத்தின் விளைவாக உருவான, அரசமைப்பு சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள ஒரு சோஷலிச, மதச்சார்பற்ற, ஜனநாயக, உயர் தன்னாளுமை கொண்ட குடியரசைக் கட்டுவதிலும், தனது குடிமக்கள் அனைவருக்கும் சமூக நீதியை, பொருளாதார நீதியை, அரசியல் நீதியை உறுதிப்படுத்துவதிலும் கல்விமுறை எந்த அளவிற்கு சிறப்பாகப் பங்களிக்க முடியும் ?
6. வாசித்தல், எழுதுதல், எண்களை வரிசைப்படுத்துதல் என்பதோடு கல்வியைச் சுருக்கிவிடாமல், சமுதாய மாற்றம் என்ற மிகப் பெரிய செயலுக்கான கருவியாக கல்வியை நாம் எப்படிப் பயன்படுத்தப் போகிறோம் ?

(கட்டுரையாளர் பெங்களூருவில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின், குழந்தைகள் மற்றும் சட்டங்கள் மையத்தின், சீரான, சமத்துவமான, தரமான கல்வித்திட்ட தலைவர்)

# தனியார் மயமாகும் தொடக்கப் பள்ளிகள்

- எஸ்.வி. நாராயணன்

அரசியல் – பொருளாதார மாற்றம் என்பது, ஒரு சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் தனக்கு அனுகூலமான அரசியல் மற்றும் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தித் தன்வயப்படுத்தும். அடிமைச் சமூகம், நிலப்பிரபுத்துவச் சமூகம், 15ஆம் நூற்றாண்டு முதல் பல வடிவங்களில் உலாவரும் முதலாளித்துவச் சமூகம்வரை அனைத்திலும் இதற்கான சான்றுகளைப் பார்க்கலாம். உற்பத்தி முறை மற்றும் அதன் இயல்புகள், சமூகத்தின் ஒவ்வொரு அமைப்பிலும் தனது குணங்களை ஒன்றிணைக்கும். நிலப்பிரபுத்துவ சமூகத்தின் பின்புலமாகவும் கூட்டாளியாகவும் இருந்த கத்தோலிக்க மதநெறிகளுக்கு எதிராக, அரசியல் – பொருளாதார மாற்றத்திற்கு ஏற்ப உருவான ப்ரொடஸ்டண்ட் பிரிவு, முதலாளித்துவ அமைப்பின் தன்மைகளை உள்வாங்கியதை மாக்ஸ் வெப்பர், எனும் நூலில் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். இப்படி அரசியல் – பொருளாதார மாற்றம் சமூகத்தின் அமைப்புக்களான மதம், குடும்பம், கல்வி, கலாச்சாரம் என எல்லாவற்றிலும் தனது இயல்பினை நிலையாகப் பதியச் செய்கிறது.

## இந்தியாவின் அரசியல் – பொருளாதார மாற்றம்

சுதந்திரத்திற்குப்பின் இந்தியா பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டும் வகையில் 'Mixed Economy' எனப்படும் பல்வகை பொருளாதார இயல்புகளை இணைத்த அரசியல் – பொருளாதார கொள்கையைப் பின்பற்றியது. இதன் அடிப்படையில், அரசு மற்றும் தனியார் முதலீட்டின் வாயிலாகப் பல்வேறு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, பொருளாதார முன்னேற்றப் பாதையில் பயணித்தோம். இப்படிப்பட்ட அமைப்பில், அரசு முக்கிய பங்கு வகித்தாலும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அதன் முதலீட்டை மேம்படுத்தும் சிறப்பு அம்சங்கள் கொண்டதே இந்த அரசியல் பொருளாதாரம். தனியார் கைகள் வலுவடையவும், இந்தக் கொள்கையின் முரண்கள் மேலோங்க, உலகப்பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் இந்தியா புதிய தாராளமயக் கொள்கையை 1991இல் பின்பற்றத் தொடங்கியது.

புதிய தாராளமயவாதம் என்பது நடைமுறையில், Structural Adjustment Programme (SAP) எனப்படும் அரசியல் – பொருளாதாரக் கட்டமைப்பைச் சீரமைக்கும் செயல்திட்டமாகக் களமிறக்கப்படுகிறது. இந்தச் சீரமைக்கும் பணியின் முக்கிய நோக்கம் அரசின் பொது வருமானப் பற்றாக்குறையை (Fiscal Deficit) கட்டுப்படுத்துதல், மேலும் அதை முற்றிலும் போக்குவதே ஆகும். இதன் அடிப்படையில் அரசின் செலவுகளைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், சமூக மேம்பாட்டிற்கான செலவினம் குறிவைக்கப் படுகிறது. மேலும் இந்த மாற்றத்தினால் ஏற்படும் குறைபாடுகளுக்கு மருந்தாக தனியார்மயம் முன்னிறுத்தப்படுகிறது.

17ஆம் நூற்றாண்டில் உருவான தாராளவாதக் கொள்கைக்கும், 1970 முதல் உலகெங்கும் அமல்படுத்தப்பட்டு வரும் புதிய தாராளவாதக் கொள்கைக்குமான வேறுபாட்டை அறிவது முக்கியமாகும்.

பழைய தாராளவாதம் தனிமனிதனை அரசின் தலையீடு இன்றிச் செயல்படுவதற்கான முழுச்சுதந்திரத்தைப் பேணுகிறது. தனிமனிதத் திறனுக்கு அரசின் தலையீட்டை ஒரு தடையாகக் கருதும் இக்கொள்கை, அரசின் பங்கைத் தனிமனித முயற்சியிலிருந்து விலக்கி, அரசு செயல்பாட்டு எல்லையைச் சுருக்கி, தனிமனிதன் மற்றும் தனியாருக்கான எல்லையை விரிவுபடுத்துகிறது. ஆனால் புதிய தாராளவாதம் இதே கொள்கைகளை முன்னிறுத்தி அரசின் செயல்பாடு என்பது தனிமனித முயற்சியில் தலையீடு இல்லாமல் இருப்பது மட்டுமன்றி, எங்கெல்லாம் தனியாருக்கான சந்தை உருவாகவில்லையோ அங்கெல்லாம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சந்தை உருவாக்கத்திற்கான அடித்தளத்தை அரசே ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அரசின் செயல்ப்பாட்டைப் பழைய தாராளவாதத்தில் எதிர்மறையாகவும் புதிய தாராளவாதத்தில் ஆக்கபூர்வமாகவும் காண முடிகிறது.

இதன் வெளிப்பாடாகவே, கடந்த 20 ஆண்டுகளாக, இக்கொள்கையைப் பின்பற்றும் அனைத்து நாடுகளிலும், சமூக மேம்பாட்டிற்கான கல்வி, மருத்துவம் போன்றவற்றில் நிதி ஒதிக்கீடு குறைந்து வரும் போக்கைப் பார்க்க முடிகிறது. இதன் மூலம், மறைமுகமாகத் தனியாருக்கான சந்தையை அரசு உருவாக்கி வருவதைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

## தமிழகமும் புதிய பொருளாதாரமயமும்

இந்திய அரசியலில், மாநிலங்களுக்கு என தன்னிச்சையான அரசியல் – பொருளாதார நிலைப்பாடு

என்பது கிடையாது. தமிழ்நாட்டிலும் நடுவண் அரசின் செயல்பாட்டிற்கு ஏற்ப திமுக, அதிமுக ஆட்சியில் புதிய தாராளவாதக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்காகப் பல இலவசத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் திராவிடக் கட்சிகள், மிகவும் தந்திரமாகத் தனியாருக்கான தனது சேவையைச் செய்து வருகிறது. இன்றைய தமிழகத்தில், அரசுப் பள்ளிகளில் படிப்பது மற்றும் அரசு மருத்துவ மனைகளுக்குச் செல்வது என்பதை மிகவும் தரம் தாழ்ந்த செயலாகக் கருதக்கூடிய பொதுக் கருத்தை உருவாக்கும், நடுவண் அரசின் செயலை மிகச் செம்மையாகத் திராவிடக் கட்சிகளும் ஆதரித்துச் செய்து வருகின்றன. இதன் வெளிப்பாடாக அரசுப் பள்ளிகளும் அரசு மருத்துவமனைகளும் இன்று பராமரிப்பு இன்றி, நிதிப் பற்றாக்குறை காரணமாக தரம் இழந்து, தனியாருக்கான பரப்பளவை விரிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தில் தனியாருக்கான இடப்பரப்பு, கடந்த 20 ஆண்டுகளாக விரிவடைந்து வருவதையும், அதற்கான அரசின் மறைமுகச் செயல்பாட்டையும் மிகத் தெளிவாகக் காணமுடிகிறது. 1990ஆம் ஆண்டிற்குப் பிறகு சமூக மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் அகில இந்திய அளவில் ஏற்பட்ட தொய்வைத் தமிழகத்திலும் காண முடிகிறது.

## சமூக மேம்பாட்டிற்கான நிதிஒதுக்கீடு சதவிகிதம் (Social Sector Expenditure) (தமிழகம்)

புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாக ஏற்பட்டுள்ள சமூக ஏற்றதாழ்வு, வேலையின்மை, விலைவாசி உயர்வு போன்ற சமூகச் சீர்கேடுகளுடன், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் வீழ்ச்சி அடைந்து வரும் நிதிஒதுக்கீட்டின் போக்கு, வரும் காலங்களில் சமூக மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான அரசியலில் மிகப்பெரும் சவாலாக இருக்கும். ரிசர்வ் வங்கியின் தற்போதைய புள்ளிவிவரம் மூலம் தமிழகத்தில் சமூக மேம்பாட்டிற்கான நிதிஒதுக்கீட்டின் விகிதம் கீழ்நோக்கிச் செல்லும் நிலையைக் காணமுடிகிறது. இதன் காரணமாகக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டிலும் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வரும் மாற்றத்தைப் பார்க்க முடிகிறது.

| வருடம் | மொத்தப் பங்கீட்டில் சமூக மேம்பாட்டிற்கான ஒதுக்கீடு (%) |
|---|---|
| 1990–91 | 45.1 |
| 1995–96 | 41.1 |
| 2000–01 | 39.4 |
| 2005–06 | 36.9 |
| 2010–11 | 40.2 |
| 2014–15 (BE) | 37.1 |

*ஆதாரம் : ரிசர்வ் வங்கி (2015; 124)*

## மொத்தச் செலவில் கல்விக்கான செலவின் சதவிகிதம் (தமிழகம்)

இது மறைமுகமாகத் தனியாருக்கான சந்தையைக் கல்வித் தளத்தில் ஊக்குவிப்பது ஆகும். இந்த நிதிக் குறைப்பின் விளைவாக தொடக்கக் கல்வியில் அரசாங்கப் பள்ளிகளின் விகிதம், மாணவர் சேர்க்கை விகிதம், ஆசிரியர் நியமனம் மற்றும் பள்ளி வசதிகளில், பெரும் சீர்குலைவு ஏற்பட்டு மக்கள் தாமாகவே தனியார்ப் பள்ளிகளை நோக்கிச் செல்லும் நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இப்படியாகப் புதிய தாராளமயவாத சாயற்கூறுகளை நாம் தமிழகத் தொடக்கக்கல்வியில் காணமுடிகிறது.

| வருடம் | செலவு (%) |
|---|---|
| 2000–01 | 18 |
| 2005–06 | 13.6 |
| 2010–11 | 15.2 |
| 2014–15 ( BE) | 14.2 |

*ஆதாரம் : ரிசர்வ் வங்கி (2015; 118)*

## தொடக்கக் கல்வியில் தனியார் பள்ளிகள்

1990களுக்கு முன்பு தமிழகத்தில் தொடக்கக் கல்வியில் தனியார்ப் பள்ளிகள் மிகச்சிறிய அளவில் இருந்தன. சாதி – வர்க்க வேறுபாடுகள் இருந்தபோதிலும் அரசாங்கக் கல்விக்கூடங்கள் பெரும்பாலான மாணவர்களை ஒன்றிணைக்கும் மையப்புள்ளிகளாக இருந்தன. ஆனால் 1990களுக்குப் பிறகு சமூகத்தில் நிலவி வரும் சாதிய – வர்க்க வேறுபாடுகளை மிகத் தெளிவாக கல்விச்சாலைகள் பிரதிபலிக்கின்றன. இன்று அரசாங்கக் கல்விக்கூடங்கள் என்பன தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் உள்ள அடித்தட்டு மக்களின் இடம் என்றே அறியப்படுகிறது. பல நேரங்களில் இவர்களும் இந்த கல்விச்சந்தையின் சூட்சமத்தில் சிக்கித் தமது வாழ்நிலை மேம்படும் என்ற நம்பிக்கையில் தனியார் கல்விச்சாலைகளை நோக்கிச் செல்கின்றனர்.

## அரசு மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளின் சதவிகிதம் (தமிழகம்)

| வருடம் | அரசுப் பள்ளிகள் (%) | தனியார்ப்பள்ளிகள் (% ) |
|---|---|---|
| 2002–03 | 74.2 | 25.8 |
| 2003–04 | 72.3 | 27.7 |
| 2004–05 | 70.7 | 29.3 |
| 2005–06 | 66.96 | 33.04 |
| 2006–07 | 67.01 | 32.99 |
| 2007–08 | 66.27 | 33.71 |
| 2008–09 | 65.75 | 34.25 |
| 2009–10 | 65.44 | 34.56 |
| 2010–11 | 65.47 | 34.53 |
| 2011–12 | 65.6 | 34.4 |
| 2012–13 | 65.3 | 34.7 |
| 2013–14 | 65.16 | 34.84 |

*ஆதாரம்: NUEPA (2002–14)*

தனிமனிதத்திறனை மேன்மேலும் செம்மைப்படுத்த சந்தை மிகப்பெரிய பங்கு வகிப்பதாக புதிய தாராளமய வாதம் வாதாடுகிறது. இதனால், மனித உழைப்பு மற்றும் திறனை வெளிக்கொணரும் அனைத்துத் தளங்களில் இருந்தும் அரசு விலகவேண்டும் என்கிறது. இந்த கொள்கை வெளிப்பாட்டைத் தமிழகத் தொடக்கப்பள்ளிகளில் காணமுடிகிறது. 2003இல் 74.2 இருந்த அரசுப்பள்ளிகள் 2014இல் 65.16 விகிதமாகக் குறைந்துள்ளன. இதே காலகட்டத்தில் தனியார்ப் பள்ளிகளின் வளர்ச்சி மிகுதி.

### அரசு மற்றும் தனியார்ப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை சதவிகிதம் (தமிழகம்)

| வருடம் | அரசுப் பள்ளிகள் (%) | தனியார் பள்ளிகள் (%) |
|---|---|---|
| 2002–03 | 60.3 | 39.7 |
| 2003–04 | 57.5 | 42.5 |
| 2004–05 | 50.08 | 43.91 |
| 2005–06 | 53.3 | 46.7 |
| 2006–07 | 52 | 48 |
| 2007–08 | 49.78 | 50.22 |
| 2008–09 | 46.67 | 53.33 |
| 2009–10 | 44.94 | 55.06 |
| 2010–11 | 43.62 | 56.38 |
| 2011–12 | 43.23 | 56.77 |
| 2012–13 | 40.44 | 59.56 |
| 2013–14 | 41.06 | 58.94 |

*ஆதாரம்: NUEPA (2002–14)*

மாணவர் சேர்க்கை விகிதத்தைப் பார்க்கும்போது, அரசின் அரசியல் – பொருளாதார சூழ்ச்சியில் மக்கள் மூழ்கடிக்கப்பட்டு, தனியார்ப் பள்ளிகளில்தான் தரமான கல்வி கிடைக்கிறது என்ற முடிவுக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளது தெரிகிறது.

நிதிப் பற்றாக்குறை மூலம் அரசுப்பள்ளிகளில் மாணவர்களைத் தக்கவைக்கப் போதுமான வசதிகள் செய்திடாமல் மறைமுகமாகத் தனியார்ப் பள்ளிகளுக்கான சந்தையை அரசு உருவாக்குகிறது. தனியார்ப் பள்ளிகளில் 2002இல் 39.7 விகிதமாக இருந்த மாணவர் சேர்க்கை இன்று 59 விகிதமாக ஏற்றம் அடைந்துள்ளது.

### அரசு மற்றும் தனியார்ப் பள்ளிகளில் ஆசிரியர் சதவிகிதம் மற்றும் ஒப்பந்த ஆசிரியர்களின் சதவிகிதம் (தமிழகம்)

அரசுப் பள்ளிகளின் வீழ்ச்சியோடு அதன் ஆசிரியர் விழுக்காடும் குறைவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இதனிடையே ஒப்பந்த ஆசிரியர்களின் விகிதம் வலுவடைவது நிரந்தர ஆசிரியர் பணியின் எதிர் காலத்தைக் கேள்விக்குறி ஆக்குகிறது. எங்கெல்லாம் புதிய தாராளமயவாதம் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளதோ அங்கெல்லாம் ஒப்பந்த ஆசிரியர் நியமனம் வலுவடைவது அரசின் பின்வாங்கலைத் தெளிவாக ஊர்ஜிதப் படுத்துகிறது. சமீப காலமாக ஒப்பந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரித்திருப்பதையும், ஏறியிறங்கு தன்மை கொண்டுள்ளதையும் பார்க்க முடிகிறது.

| வருடம் | அரசுப் பள்ளிகள் (%) | | தனியார் பள்ளிகள் (%) |
|---|---|---|---|
| | மொத்த ஆசிரியர்கள் (%) | மொத்த அரசு ஆசிரியர்களில் ஒப்பந்த ஆசிரியர்கள் (%) | |
| 2002–03 | 57.12 | 0.77 | 42.88 |
| 2003–04 | 53.5 | 1.41 | 46.5 |
| 2004–05 | 52.7 | 1.51 | 47.3 |
| 2005–06 | 49.3 | 2.79 | 50.7 |
| 2006–07 | 49.5 | 2.15 | 50.5 |
| 2007–08 | 47.07 | 1.41 | 52.99 |
| 2008–09 | 45.76 | 1.24 | 54.24 |
| 2009–10 | 45.47 | 0.97 | 54.53 |
| 2010–11 | 45.19 | 4.27 | 54.81 |
| 2011–12 | 44.78 | 16.47 | 55.22 |
| 2012–13 | 43.99 | 9.5 | 56.01 |
| 2013–14 | 42.91 | 3.9 | 57.09 |

*ஆதாரம்: NUEPA (2002–14)*

கல்வித்தளத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த மாற்றத்தை நாம் புதிய தாராளமயவாத அரசியல் – பொருளாதாரக் கோட்பாட்டினிடையே ஆராயும்போது மாற்றத்திற்கான காரணங்களும் வருங்காலத் திசையும் நமக்குப் புலப்படுகின்றன. சாதி, மதம் மற்றும் வர்க்க வேறுபாட்டினுள் அடைந்து கிடக்கும் நமது சமூகத்தில் அரசின் பின்வாங்குதலும், தனியாரின் எழுச்சியும் மிகவும் அபாயகரமான சூழலை ஏற்படுத்தும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இடஒதுக்கீட்டிற்காகக் களமிறங்கும் பல முற்போக்கு குழுக்கள் தனியார்மயத்தின் மூலம் ஏற்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பது ஆச்சரியமளிக்கிறது.

**ஆதாரம்: காலச்சுவடு, ஆகஸ்ட் 2015**

# புதிராய் காணாமல் போகும் ஆயிரமாயிரம் குழந்தைகள்

– அருண் போத்ரா

*ஒரு தோராயமான மதிப்பீட்டின்படி நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 70,000 முதல் 80,000 குழந்தைகள் வரை காணாமல் போகிறார்கள். இந்த வழியில் தங்கள் குழந்தைகளை இழப்பதை விட பெற்றோர்களுக்கு பெருந்துயரம் வேறெதுவும் இருக்க முடியாது.*

பெரிய நகரங்களில் பரபரப்பான போக்குவரத்து நடைபெறும் சாலைகளின் சந்திப்புகளில் ஒரு விஷயம் பொதுவாக நடக்கும். சிவப்பு விளக்குகள் எரியத் தொடங்கியதும் சில குழந்தைகள் செயல்படத் தொடங்குவார்கள், நிற்கிற கார்களின் கண்ணாடி ஜன்னல்களைத் தட்டுவார்கள், பிச்சைக்காகக் கையேந்தி சில்லரைகள் கேட்பார்கள். இதைப் பார்க்கும்போது பொதுவாக நாம் எப்படி எதிர் வினையாற்றுகிறோம். பெரும்பாலோர் அந்தக் குழந்தைகளைக் கண்டுகொள்வதில்லை, எப்போது பச்சை விளக்கு எரியும் என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிலர் அவர்களைத் தள்ளிப் போ என்று விரட்டுவார்கள். சிலர் அவர்களுக்குச் சில்லரைகள் கொடுப்பார்கள். வெகுசிலர் அந்தக் குழந்தைகளுக்குப் பணமாகத் தருவதற்குப் பதிலாக, உண்பதற்கு ஏதேனும் வாங்கித் தர முன்வருவார்கள். பணமாகக் கொடுத்தால் அவர்களைப் பிச்சையில் ஈடுபடுத்திய கும்பல் அதைக் கைப்பற்றிவிடக் கூடும் என்று நினைத்து இவ்வாறு செய்கிறார்கள். ஆனால் நம்மில் யாருமே அவர்கள் யார், எங்கிருந்து வருகிறார்கள் என்று விசாரிப்பதில்லை. காணாமல் போன குழந்தைகள் தொடர்பாக நாடு தழுவிய அளவில் காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒரு விஷயத்தைக் காட்டுகின்றன: அந்தக் குழந்தைகளிடம் இந்த சாதாரணமான கேள்விகளை உண்மையான அக்கறையோடும் பரிவோடும் கேட்டால் காணாமல் போன ஆயிரக் கணக்கான குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர்களுடன் மீண்டும் இணைக்க முடியும். ரயில் நிலையங்களில், பேருந்து நிறுத்தங்களில், ஆலயங்களில், மேம்பாலங்களுக்கு அடியில், நெருக்கடியான சாலைச் சந்திப்புகளில், சந்தைகளில் என எல்லா இடங்களிலும் இந்தக் குழந்தைகளை நாம் காண்கிறோம். ஒரு தோராயமான மதிப்பீட்டின்படி நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 70,000 முதல் 80,000 குழந்தைகள் வரை காணாமல் போகிறார்கள். இந்த வழியில் தங்கள் குழந்தைகளை இழப்பதை விட பெற்றோர்களுக்கு பெருந்துயரம் வேறெதுவும் இருக்க முடியாது. தன் குடும்பத்திலிருந்து பிரிக்கப்படும் இத்தகைய ஒரு குழந்தையின் அவலம் எப்படி இருக்கும் என்பதை நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

ஆனால், இந்தத் துயரங்கள் தனிப்பட்ட முறையிலானவை. ஒரு சமூகமாக நாம் இந்தப் பிரச்சனை குறித்துப் பெரிதாகக் கவலைப்படுவதில்லை. இக்குழந்தைகளைக் கண்டுபிடிக்க அமைப்பு சார்ந்த முயற்சி எதுவும் எடுக்கப்பட்டதில்லை. அனாதையாக்கப்படுகிற அல்லது தொலைந்துபோகிற குழந்தைகளுக்குப் புகலிடம், உணவு, ஆடைகள், அடிப்படைக் கல்வி ஆகியவற்றை வழங்குவதற்கு அரசாங்க அமைப்புகளும், அரசு சாரா அமைப்புகளும் முயற்சிகளை எடுத்ததுண்டு. பல நேரங்களில் அந்த முயற்சிகள் உண்மையானதாகவும், சில நேரங்களில் வெறும் காகிதத்தில் மட்டும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் குழந்தைகள் தாக்குப் பிடித்து வாழ்வதற்கு இந்த உதவிகள் தேவைதான். ஆனால், இப்படிப்பட்ட உதவிகள் எதுவுமே பெற்றோரின் பராமரிப்புக்கு ஈடாக முடியாது. ஒரு குழந்தை காணாமல் போகிறதென்றால் பெற்றோர், காவல் துறையின் உதவியை நாடுகிறார்கள். காவல்துறையினர் முயற்சி செய்கிறார்கள், சில நேரங்களில், காணாமல் போன குழந்தை கண்டுபிடிக்கப்படுவதும் உண்டு,. ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் மிக மிகக் குறுகியதாகவே இருக்கின்றன என்பதை அனுபவங்கள் காட்டுகின்றன. ஒரு குழந்தை காணாமல் போன முதல் சில நாட்களுக்குள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால் அதன் பிறகு, காவல்நிலையத்தின் பதிவேட்டில் மட்டுமே அந்தக் குழந்தையைக் காண முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

ஆயினும், 2013 ஜனவரியில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஒரு ஆணை, இந்தியாவில் காணாமல் போகிற ஆயிரக்கணக்கான குழந்தைகளின் வாழ்க்கையை, மாற்றிவிட்டது. அதுவரையில், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பது என்பது

காவல்துறையில் மிகவும் கண்டுகொள்ளப்படாத வேலையாகவே இருந்து வந்தது. மேலும், நமது நாட்டில் காவல்துறையினருக்கு சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு, குற்றச் செயல் கண்டுபிடிப்பு, விஐபி பாதுகாப்பு, காவல் பொறுப்பு உள்ளிட்ட எண்ணற்ற பணிகள் இருக்கின்றன. சட்ட நுணுக்கப்படி பார்த்தால் ஒரு குழந்தை காணாமல் போவதென்பது குற்றச் செயலல்ல. ஆகவே அது, காவல் நிலைய அன்றாடக் குறிப்பேட்டில் அல்லது காணாமல் போனவர்கள் பற்றிய பதிவேட்டில் வெறுமனே குறித்துக் கொள்ள வேண்டிய தகவலாக மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால், பச்பன் பச்சாவோ அண்டோலன் அமைப்பு தாக்கல் செய்த ஒரு பொது நல மனு மீது விசாரணை நடத்திய உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையானது, சட்டப்பூர்வ அம்சங்கள் உள்பட இந்த நிலைமையை பெருமளவுக்கு மாற்றியுள்ளது.

ஒரு குழந்தை காணாமல் போனதாகப் புகார் வந்தால் காவல்நிலையத்தில் அது குறித்த முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட வேண்டும், அது குறித்துப் புலன்விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. இத்தகைய பிரச்சனையில் பதிலளிக்கும் கடமைப் பொறுப்பு என்ற முக்கியமான அம்சத்தைத் இந்த ஆணைக் கொண்டு வந்துள்ளது. ஏனெனில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் 154 பிரிவின் கீழ் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விட்டால், அதே சட்டத்தின் 173 பிரிவின் கீழ் ஒரு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்த பிறகுதான் அந்த முதல் தகவல் அறிக்கையை விலக்கிக்கொள்ள முடியும். குழந்தைக் காணாமல் போவது குற்றச் செயல் அல்ல என்றும், ஆகவே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இயலாது என்றும் ஒரு மாநில அரசு சட்ட நுணுக்கப் பிரச்சனையை எழுப்பியது. அதன் மீது தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் இப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, ஒரு குழந்தை காணாமல் போகிறதென்றால் அந்தக் குழந்தைக் கடத்தப்பட்டதாக அல்லது (பிச்சை, பாலியல்) தொழிலில் ஈடுபடுத்தக் கொண்டு செல்லப்பட்டதாகவே கருதப்பட வேண்டும் என்று ஆணையிட்டது.

காணாமல் போன குழந்தைகள், அவர்களது நொறுங்கிப்போன குடும்பங்களின் மனமுருகச் செய்யும் கதைகளால் நெகிழ்ந்து போன உச்சநீதிமன்றம் பிரச்சனையை அத்தோடு விட்டுவிடவில்லை. கடந்த காலத்தில் காணாமல் போன குழந்தைகள் பற்றிய புகார்களையும் பதிவு செய்து, அவர்களைக் கண்டுபிடிக்க சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அனைத்து மாநில காவல்துறைகளுக்கு ஆணையிட்டது அத்துடன், அனைத்து மாநிலங்களின் தலைமைச் செயலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர்கள் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திர வடிவில் அறிக்கைத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. பல புகார்கள் தொடர்பாக, உயர்நிலை அதிகாரிகள் நேரடியாக நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள். இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக, ஆபரேஷன் ஸ்மைல், ஆபரேஷன் மஸ்கான் என்ற இரண்டு சிறப்பு நடவடிக்கைகள் அனைத்து மாநில காவல் துறையினராலும் மேற்கொள்ளப்பட்டன. அதன் பலனாக, கடந்த 9 மாதங்களில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது குடும்பங்களில் சேர்க்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளில் மீட்கப்பட்ட குழந்தைகளோடு பேசியபோது பல விசித்திரமான தகவல்கள் கிடைத்துள்ளன. அந்தக் குழந்தைகள் காணாமல் போனதற்கு மிகப் பெரிய அளவில் காரணமாக இருந்திருப்பது அவர்களது பெற்றோர்கள்தான். பொதுவாக நினைக்கப்படுவது போல அந்தக் குழந்தைகள், கடத்தல் கும்பல்களால் கடத்தப்படவில்லை. வறுமை, வாய்ப்புகளின்மை, புறக்கணிப்பு, சில நேரங்களில் பெற்றோர்களின் அவமதிப்பு போன்றவைதான் குழந்தைகள் தங்களுடைய வீடுகளைவிட்டு வெளியேறுவதற்கு முக்கியக் காரணங்களாக இருந்திருக்கின்றன. இவ்வாறு வெளியேறும் குழந்தைகள் கடும் துயங்களுக்கும், பாலியல் உள்ளிட்ட பல்வேறு சுரண்டல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான குழந்தைகள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்தனர். ஆனால், தங்களால் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல முடியாது என்றும் கூறினர். பெற்றோர்களிடமிருந்து இத்தகைய குழந்தைகளைப் பிரித்து வைப்பதில் பாதுகாப்பு இல்லங்களுக்கு மிகப் பெரிய பங்கு இருக்கிறது என்பது தெரிய வந்தது. நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான பாதுகாப்பு இல்லங்களில் லட்சக்கணக்கில் பெற்றோரை இழந்த குழந்தைகளும், காணாமல் போன குழந்தைகளும் இருக்கிறார்கள். பல இல்லங்கள் மோசமான நிர்வகிக்கப்படுவது பற்றியும், அங்கு குழந்தைகள் நடத்தப்படுவது பற்றியும் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், மிகவும் நன்றாக பராமரிக்கப்படுகிற இல்லங்களில்கூட இந்தக் குழந்தைகள் எங்கிருந்து வந்தார்கள் என்பதைக்

கண்டறிந்து, மீண்டும் அவர்களைக் குடும்பங்களோடு இணைப்பதற்கான முயற்சிகள் போதிய அளவில் மேற்கொள்ளப்படுவதில்லை.

உச்சநீதிமன்ற ஆணைப்படி மேற்கொள்ளப்பட்ட தேடல் நடவடிக்கைகளில் பெரும்பாலான குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்களிலிருந்து மீட்கப்பட்டார்கள். உதாரணமாக, இத்தகைய ஒரு நடவடிக்கையில், ஒடிஷா மாநில காவல்துறையினர் 9 மாநிலங்களைச் சேர்ந்த பாதுகாப்பு இல்லங்களில் சோதனை நடத்தி, காணாமல் போன 87 ஒரியக் குழந்தைகள் அங்கிருப்பதைக் கண்டுபிடித்தனர். அந்தக் குழந்தைகள் ஒரிய மொழியில் பேசுவதை வைத்தே அவர்கள் ஒடிஷா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை யாரும் ஊகித்திருக்க முடியும். ஆனால், பல ஆண்டுகளாக அந்தக் குழந்தைகளை வைத்திருந்த பாதுகாப்பு இல்லங்களின் நிர்வாகங்கள் அவர்களைத் திருப்பி அனுப்புவதற்கோ அல்லது அவர்களது குடும்பங்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்கோ அல்லது அவர்களது சொந்த மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கோ எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அந்தக் குழந்தைகளில் மூன்று வயதே ஆனவர்களும் இருந்தார்கள். அவர்கள் திரும்பிச் செல்லவும் வழியற்றவர்கள். தங்கள் குடும்பங்களுக்குத் தகவல் தெரிவிக்கவும் வகையற்றவர்கள். உத்தரபிரதேசம், ஜார்கண்ட், தெலங்கானா, மேற்கு வங்கம் உள்ளிட்ட வேறு சில மாநிலங்களின் காவல்துறையினருக்குக் கிடைத்த அனுபவங்களும் இதே போன்றவைதான். சில பெற்றோர்கள் காணாமல் போன தங்களது குழந்தைகளை வேறு இடங்களில் தேடிக் கொண்டிருக்க அவர்களது சொந்த ஊர்களில் உள்ள சில ஆதரவற்றோர் இல்லங்களில்தான் அந்தக் குழந்தைகள் இருந்தார்கள் என்ற செய்தியும் உண்டு!

பாதுகாப்பு இல்லங்களின் இத்தகைய செயல்பாட்டின் பின்னணியில் பணத்தாசைதான் பெரும்பாலும் இருந்திருக்கிறது. அரசாங்கத்திடமிருந்து அவர்களுக்கு நிதியுதவியும், பொதுமக்களிடமிருந்து நன்கொடைகளும் வருகின்றன. அந்த இல்லங்களில் எத்தனை குழந்தைகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே நிதியுதவியின் அளவு இருக்கும். இவ்வாறாக, குழந்தைகளைப் பராமரித்து உணவளித்து வருவது இத்தகைய நிர்வாகங்களுக்கு நல்ல ஆதாயமளிப்பதாக இருக்கிறது, அக்குழந்தைகளைப் பெற்றோரிடம் திருப்பி அனுப்புவது அவ்வாறு இல்லை. கேரளத்தில், சில இல்லங்களுக்கிடையே அரசாங்கத்திடமிருந்து கூடுதல் நிதி கோரிப் பெறுவதற்காக, குழந்தைகளைத் தற்காலிகக் கடனாகப் பரிமாறிக்கொள்கிற ஏற்பாடும் இருந்திருக்கிறது!

இது ஒரு, மானுடம் சார்ந்த மிகப் பெரிய பிரச்சனை என்பதால், காணாமல் போகும் குழந்தைகள் குறித்த தகவல்கள் எளிதில் பரப்பப்படுவது, அவர்களைப் பற்றிய தகவல்கள் இணையத்தில் உடனடியாகக் கிடைக்கச் செய்வது, பாதுகாப்பு இல்லங்களில் இருக்கும் குழந்தைகள் குறித்த தகவல்களும் இணையத்தில் பதிவு செய்யப்படுவது ஆகியவை அடிப்படையாகத் தேவைப்படும் நடவடிக்கைகளாகும். இந்த நோக்கத்துடன்தான் டிராக்சைல்ட் (TrackChild) என்ற பயனுள்ள, பல்வேறு தகவல்களுடன் கூடிய ஒரு இணையதளத்தை அரசு தொடங்கியுள்ளது. ஆனால், அது குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடையே பெருமளவுக்கு இல்லை. மேலும், பாதுகாப்பு இல்லங்களைப் பொறுத்தவரையில் தங்களிடம் உள்ள குழந்தைகள் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதில் தயக்கம் காட்டுகின்றன. அவர்களது தயக்கத்திற்கான காரணம் புரிந்துகொள்ளக்கூடியதுதான். காவல்துறையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது, சர்வதேச அளவில் நிதியுதவி பெறும் பாதுகாப்பு இல்லங்கள், தங்களது வளாகங்களுக்குள் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. அரசிடமிருந்து தாங்கள் நிதியுதவி பெறவில்லை என்று காரணம் கூறின. அவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்துதான் நிதியுதவி வருகிறது என்றாலும்கூட அந்த இல்லங்களில் உள்ள குழந்தைகள் இந்தியர்கள்தான் என்று அந்த நிர்வாகங்களிடம் சொல்ல வேண்டியிருந்தது. குழந்தைகளுக்கு உணவளிக்கிறார்கள் என்பதற்காக அக்குழந்தைகள் அந்த நிர்வாகங்களுக்குச் சொந்தமாகிவிட மாட்டார்கள். பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு முதலில் பொறுப்பேற்க வேண்டியது அரசுதான். அதற்குப் பிறகுதான் மற்றவர்களுடைய பொறுப்பு

நாட்டில் காணாமல் போகும் ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் குவித்து வைத்துக்கொள்கிற இடங்களாக பாதுகாப்பு இல்லங்கள் இருப்பது தொடரக்கூடாது, இதை உறுதிப்படுத்திட, அந்த இல்லங்கள் குறித்த செயல்முனைப்பு மிக்க தகவல் நிர்வாக ஏற்பாடு ஒன்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டிய அவசரத் தேவை இருக்கிறது என்பதே வெளிப்படை.

கட்டுரையாளர் **அருண் போத்ரா** ஒரு ஐபிஎஸ் அதிகாரி.

**ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ், 7.10.15**

# சிறார் குற்றங்கள் பற்றிய புள்ளி விவரங்களின் பின்னுள்ள உண்மைக் கதை

– ஆஷா முகுந்தன்

இந்தக் கட்டுரை, இந்தியாவில் குற்றங்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கையின் 10வது அத்தியாயத்தில் சட்டத்தோடு முரண்படும் சிறார் பற்றி அளிக்கப்பட்டுள்ள விவரங்களையும், இந்தியாவில் குற்றங்கள் பற்றிய சுருக்கமான அறிக்கை 2013ல் வெளியிடப்பட்டுள்ள 'மறுக்கத்தக்கது' மற்றும் 'வரம்பு' ஆகியவற்றோடும் ஒப்பிட்டு அலசுகிறது. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தால் (NCRB) பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் கூர்மையாக அலசப்பட்டுள்ளன. மேலும், சட்டத்தோடு முரண்படுகின்ற சிறார் பற்றிய புள்ளி விவரங்களையும் அட்டவணைகளையும் இந்தக் கட்டுரை கேள்விக்குள்ளாக்குகிறது. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் இந்திய அரசின் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு முதன்மையான அமைப்பாகும்.

அந்த அமைப்பு, நாட்டில் நடக்கும் குற்றங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களை இந்தியாவில் குற்றங்கள் என்னும் தலைப்பில் வெளியிடுகிற அதன் ஆண்டறிக்கையின் மூலம் அளிக்கிறது. இந்த அறிக்கை, 1953ம் ஆண்டிலிருந்து இந்திய தண்டனைச்சட்டம், உள்ளூர் அளவிலான சிறப்புச் சட்டங்கள் ஆகிய சட்டங்களின் கீழ் வரக்கூடிய குற்றங்களின் பல்வேறு அம்சங்கள் பற்றிய விவரங்களை அளிக்கிறது. இந்தியாவில் குற்றங்கள் அறிக்கை 2013, ஜூன் மாதம் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் தகவல்கள் அதிகார பூர்வமான தகவல்கள் என்று கருதப்படுகிறது, கல்வியாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் சமூக விஞ்ஞானிகளும் அவர்களது வாதத்தை நிரூபிப்பதற்கு இந்தத் தகவல்களையே பயன்படுத்துகின்றனர். இந்த புள்ளிவிவரங்கள் விரிவான அளவுக்கு அச்சு ஊடகத்தாலும் காட்சி ஊடகத்தாலும் பயன்படுத்தப் படுகிறது. ஆனால், ஊடகங்கள், இந்த அறிக்கையில் (ஷாரோன் 1996) குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகள் மற்றும் மறுக்கப்பட்டவைகள் ஆகியவற்றைப் பற்றி கணக்கில் எடுத்துக்கொள்ளாமலும் இந்த அறிக்கை பற்றி அலசி ஆராயாமலும்தான் அவ்வப்போது இதில் உள்ள தகவல்கள் பற்றி செய்தி வெளியிடுகின்றன. இத்தகைய செய்திகளைப் படிப்பவர்களை தவறான கருத்துக்களுக்கு இவை இட்டுச்செல்கின்றன மேலும் முழு விவரங்களைத் தெரிந்துகொள்ளாமல் ஒரு நிலைப்பாட்டிற்கு வருவதையும் இவை ஊக்கப்படுத்துகின்றன. இதுதான் 2012 டிசம்பர் 16, பாலியல் வல்லுறவு சம்பவத்திற்குப் (நிர்பயா) பிறகு நடந்தது. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தால் இளம் சிறார்கள் ஈடுபடும் குற்றங்கள் பற்றிய புள்ளிவிவரங்களை தவறாக அர்த்தப்படுத்தி பொது ஊடகத்தில் தொடர்ச்சியான கட்டுரைகளும் அறிக்கைகளும் வெளிவந்தது. மேலும் இளம் சிறார் குற்றங்கள் பிரச்சனை பற்றிய எதிர்மறையான கண்ணோட்டத்தை அளிக்கக்கூடிய வகையிலும் அத்தகைய செய்திகள் இருந்தன.

இந்தக் கட்டுரை சட்டத்தோடு முரண்பட்ட, இந்தியாவில் சிறார் பற்றி குற்றங்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கையின் அத்தியாயம் 10ல் உள்ள தகவல்களைப்பற்றி அலசுகிறது. இந்தக் கட்டுரை, சட்டத்தோடு முரண்பட்ட சிறார் பிரச்சனைக்கு ஒரு சமூக கண்ணோட்டத்தை அளிக்க முயற்சிக்கிறது. இப்பிரச்சனை சாதாரணமாக எப்போதும் சட்டக் கண்ணோட்டத்துடனேயே பார்க்கப்படுகிறது. இளம் சிறார் குற்றங்கள் பற்றிய புள்ளிவிவர எண்ணிக்கைகளை ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வரும்போது, நாம் நமது மனதில் இருத்திக் கொள்ள வேண்டியவைகளைப் பற்றி நம்மை எச்சரிக்கை செய்கின்றது. மேலும் இந்தக் கட்டுரை, தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் சில அட்டவணைகள், எண்கள் ஆகியவற்றின் நம்பகத்தன்மையை கேள்வி கேட்பதோடு, பயன்படுத்தப்பட்டுள்ள சில பதங்கள் பற்றி நுட்பமாக ஆய்வு செய்கிறது.

**தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் தகவல்கள்**

தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் அறிக்கை என்று அறியப்படுகிற இந்தியாவின் குற்றங்கள் பற்றிய அறிக்கை, புள்ளி விவரங்களும் சுருக்கமும் என இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. முதல் பகுதியான சுருக்கத்தில், அணிந்துரை, மறுக்கத்தக்கது, குறைபாடு, புகைப்படங்கள், புள்ளிவிவரப் பகுதியில் வெளியிடப் பட்டிருக்கும் குற்றங்களின் பல்வேறு பிரிவுகள் பற்றிய வரைபடங்கள் எண்ணிக்கைகள், புள்ளிவிவரப் பகுதி கொடுமையான குற்றங்கள், காவல்துறையாலும் நீதிமன்றத்தாலும் தள்ளுபடி செய்யப்பட்ட அல்லது முடிக்கப்பட்ட வழக்குகள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், சைபர் குற்றங்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள், திருடப்பட்ட

மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகள், சட்டத்தோடு முரண்படும் சிறார் ஆகியவை பற்றிய வெறும் தகவல்களோடு கூடிய 19 அத்தியாயங்களைக் கொண்டது. இந்தத் தகவல்கள் பற்றிய எந்த விளக்கங்களும் கொடுக்கப்படாததால் அவை வெறும் தகவல்களாக மட்டுமே கருதப்படுகிறது.

சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) திருத்தச் சட்டம் 2006ன் படி, ஒரு குற்றத்தை புரிந்ததாலோ அல்லது குற்றம் புரிந்ததாக சந்தேகிக்கப்பட்டதாலோ நீதி அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட 18 வயதுக்குக் கீழ் உள்ள எந்த ஒரு நபரும் சட்டத்தோடு முரண்படும் சிறார் என்று கருதப்படுவார்கள். சட்டத்தை மீறும் இத்தகைய குழந்தைகள் எப்போதும் அவர்கள் விருப்பத்தினால் அவ்வாறு செய்வதில்லை. ஆனால் ஒருவேளை அவர்களது வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டதன் விளைவாகக் கூட இத்தகைய செயலை செய்திருக்கலாம். அவர்களுள் பலர் சூழ்நிலைக் கைதிகள், வயது வந்தவர்களால் குற்றச் செயல்களில் ஈடுபட கட்டாயப்படுத்தப்பட்டவர்கள். பல நேரங்களில், ஒரு குற்றமும் புரியாமல் கூட முன்தீர்மானத்தாலும் முத்திரை குத்தப்படுவதாலும் பாகுபாட்டாலும் சிறார் சட்டத்தோடு முரண்படும் நிலை உருவாகிறது. அதே நேரத்தில், இத்தகைய சிறார் பற்றிய பொதுக் கருத்து, ஊடகங்கள் உருவாக்கிய மோசமான கருத்துகளின் விளைவே ஆகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில வழக்குகள், நேரிடையாகவோ மறைமுகவாகவோ இத்தகைய சிறாரின் மற்றொரு பக்கத்தை பிரதிபலிப்பதற்காக சிறார் நீதி அமைப்பின் ஆய்வுப் பிரிவால் (RCJJ) மேற்கொள்ளப்பட்டதாகும்.

இந்தியாவில் குற்றங்களின் புள்ளிவிவரங்கள் என்ற அறிக்கையின் அட்டவணை 10.8, பாஸ்போர்ட் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட 7லிருந்து 12 வயதுக்குள் இருக்கும் இரண்டு சிறுமிகள் மற்றும் இரண்டு சிறுவர்களின் வழக்குகளைப் பிரதிபலிக்கிறது. போலி பாஸ்போர்ட் வைத்திருந்ததற்காக விமான நிலையத்தில் 18 வயதுக்கு கீழ் உள்ள மைனர் சிறுமிகள் இரண்டு பேர் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு சம்பவம் சிறார் நீதித்துறையின் ஆய்வுப் பிரிவு கவனத்துக்கு வந்தது. அந்தச் சிறுமிகள் இருவரும் வேறு ஒரு நாட்டுக்கு செல்வதாக இருந்தது. அவர்கள் பாஸ்போர்ட் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டனர். இந்தச் சிறுமிகள் இருவரும் கடத்தப்பட்டிருக்கலாம், இந்த நடவடிக்கைக்குப் பின்னால் வயது வந்தோரின் பெரிய அளவிலான திட்டமிடுதல் இருக்கும் என்பதையே சமூக யதார்த்தம் நமக்கு எடுத்துரைக்கின்றது. ஒரு 12 வயது சிறுவன் வன உயிரினங்கள் (பாதுகாப்பு) சட்டம் 2006 மற்றும் வனச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு இருந்தான். அந்தச் சிறுவன் அரிய வகை பறவை இனத்தைச் சேர்ந்த பறவை ஒன்றைக் கொன்று தின்றதற்காக பிடிக்கப்பட்டான். அந்தச் சிறுவன் மிகவும் பயந்து போய்விட்டான். ஏன் அவன் காவலர்களால் பிடிக்கப்பட்டான் என்பதை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஏனென்றால் பசிக்கும்போது அவன் பறவைகளை வேட்டையாடுவது சாதாரண நிகழ்வு. மேலும் அவனது குடும்பத்துக்குப் போதுமான உணவும் இல்லை. அரிய இனப் பறவையினங்களை கொல்வது ஒரு கடுமையான குற்றம், திரை நட்சத்திரம் சல்மான் கான் கூட இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டதை நாம் நினைவுகூரலாம். ஒரு 12 வயது சிறுமி தன்னுடைய பிறந்தநாள் விழாவுக்கு அவளது நண்பர்களை வீட்டுக்கு அழைத்தாள். பிறந்தநாள் சிறுமியின் வயதுவந்த அண்ணன் அந்தச் சிறுமியின் தோழி ஒருத்தியை அவளது வீட்டில் கொண்டுவிடுவதாகக் கூறி அழைத்துச் சென்றான். போகும் வழியில், அவன் அந்தச் சிறுமியை பாலியல் வன்புணர்ச்சி செய்துவிட்டான். பிறந்தநாள் கொண்டாடிய சிறுமி பாலியல் வன்புணர்ச்சியை தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டாள்.

''காதலில் விழும்'' சிறுவர்களும் சிறுமிகளும் பாலியல் உறவை சோதித்துப் பார்க்க விரும்பும் ஒரு சமூக யதார்த்தம் பற்றியும் நமக்குத் தெரியும். இத்தகைய சம்பவங்கள் பலவற்றில் சம்மந்தப்பட்ட சிறுமிகளின் பெற்றோர்கள் காவல்துறையில் அந்தச் சிறுவர்கள் மீது பாலியல் வன்புணர்ச்சி குற்றச்சாட்டோடு வழக்குப் பதிவு செய்கிறார்கள். அதே போல, 18 வயதுக்கு கீழ் உள்ள ஆண், பெண் இருவரும் மனமொத்து வீட்டைவிட்டு வெளியேறினாலும் அது ''கடத்தல்'' என்றே குற்றம் சாட்டப்படுகிறது. இந்திய சமூகம் மற்றும் சட்டக் கட்டமைப்பு, எப்போதும் ஒரு சிறுமியை பாதிப்புக்கு உள்ளாகக்கூடியவர் என்றே பார்க்கின்றன. இந்தச் சமூக யதார்த்தத்தில், ஆண் சிறுவர்கள் மீதுதான் பொதுவாகக் கடத்தல் மற்றும் வல்லுறவு குற்றம் சுமத்தப்படுகிறது. அது சட்டம் மற்றும் சமூகத்தின் பார்வையில் ஒரு கடுமையான குற்றமாகும்.

பிரதான ஊடகங்களில் சிறார் பற்றி வெளிச்சம் போட்டுக்காட்டப்படும் கடுமையான குற்றங்கள், விதிவிலக்கானவை என்று குழந்தை உரிமை செயல்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும் அவை, சிறார் நீதி அமைப்பில் வழக்கமானவை அல்ல என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஒரு சமூகம் தன்னுடைய குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தத்

தவறியதற்கு சிறார் குற்றங்கள் ஒரு சாட்சியாக விளங்குகின்றன என்ற கண்ணோட்டத்திலேயே அத்தகைய குற்றங்கள் பார்க்கப்படவேண்டும். அத்தகைய குழந்தைகளைக் குற்றவாளிகள் என்று முத்திரை குத்துவது அவர்களின் மறுவாழ்வுக்கு உதவி புரியமுடிவதற்கு மாறாக, சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கப்படுவதில்தான் முடியும்.

### 10வது அத்தியாயத்திற்கு விளக்கம்

சட்டத்தோடு முரண்பட்ட சிறார் என்ற தலைப்பிலான புள்ளி விவரங்களின் 10வது அத்தியாயத்தில் 14 அட்டவணைகள் உள்ளன. அதில் அவர்களின் வயது மற்றும் குற்றங்களுக்கேற்ப பல்வேறு வகையான குற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றுள் சில அட்டவணைகள் சிறார் கல்வி மற்றும் பொருளாதாரப் பின்னணி பற்றிய குறிப்புகளை பிரதிபலிக்கின்றன. சில அட்டவணைகள் மாநில வாரியான விவரங்களை அளிக்கின்றன. சிறார் நீதி மையத்தால் (IJB) வழங்கப்பட்ட இறுதி ஆணைகளை பிரதிபலிக்கின்ற ஒரு அட்டவணையும் அதில் இருந்தது. சில தகவல்களின் எண்ணிக்கை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. மற்றவை, அதிகரித்த அல்லது குறைந்து விட்ட குற்றங்களின் விகிதத்தைக் காட்டுகின்றன.

**பல நேரங்களில், ஒரு குற்றமும் புரியாமல் கூட முன்தீர்மானத்தாலும் முத்திரை குத்தப்படுவதாலும் பாகுபாட்டாலும் சிறார் சட்டத்தோடு முரண்படும் நிலை உருவாகிறது.**

10வது அத்தியாயத்தைப் புரிந்து கொள்ளும்போது எச்சரிக்கையோடு அணுகவேண்டும். (1) 53 பெரு நகரங்கள் உள்ளிட்ட 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நீதிமன்ற ஆணை தேவைப்படுகிற குற்றங்கள் பற்றிய காவல் துறையின் ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் தொகுப்புதான் அதன் அறிக்கையில் வெளியிடப்பட்ட விவரங்கள் என்று ஒரு மறுப்பை தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் சுருக்க அறிக்கை கொண்டிருந்தது. தனக்கு அனுப்பப்பட்ட தகவல்களை சரிபார்க்க அல்லது உறுதிப்படுத்த தன்னிடம் எந்த ஒரு வழிமுறையும் இல்லை என்று தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

II. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் தகவல்கள் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கான எண்ணிக்கைகளையே குறிப்பிடுகிறது. இந்த அறிக்கை, அதே நேரத்தில், எந்த கால இடைவெளியில் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள்) நடைபெற்றன என்பது குறிப்பிடவில்லை. எனவே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கைகள் அந்த ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் வரை நடந்திருக்கலாம் என்ற யூகத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

III. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் அறிக்கை, குற்றங்கள், குற்றம்சாட்டப்பட்டவர்கள் பற்றிய எண்ணிக்கையை எந்தவித சமூக, பொருளாதார, சட்டம் அல்லது அரசியல் கண்ணோட்டமும் இல்லாமல் அறிமுகப்படுத்துகிறது. ஒவ்வொரு அட்டவணையின் கீழும் அந்த அட்டவணை பற்றிய விளக்கம் அளிக்கப்படவில்லை. அளிக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களின் செயல் எல்லைகள் பற்றிய குறிப்போ அல்லது மறுப்போ இந்த அறிக்கையில் இல்லை. இந்த அறிக்கையைப் படிப்பவர்கள், அந்த அறிக்கையில் உள்ள தகவல்கள் பற்றி தெளிவாகப் புரிந்துகொள்ள இரண்டு அறிக்கையையும் ஒப்பு நோக்குவார்கள் என்று நம்பப்படுகிறது. இவ்வாறு ஒப்பு நோக்கும் வாசகர்களுக்கு அவற்றைப் புரிந்து கொள்ளத் தேவையான சிறார் குற்றவாளிகள் பிரச்சனை பற்றிய சமூக சட்டப் புரிதல் இருக்கும் என்றும் யூகிக்கப்படுகிறது.

IV. அட்டவணை 10.1 இந்திய தண்டனைச் சட்டத்தின் (2003–13) கீழ் சட்டத்தோடு முரண்படுகிற சிறார் பற்றிய சம்பவங்களையும் அவற்றின் சதவீதத்தையும் பற்றி தெரிவிக்கிறது. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் தனது மறுப்பில் காவல் துறையில் பதிவுசெய்யப்பட்ட குற்ற வழக்குகளை மட்டுமே தான் பதிவு செய்திருப்பதாக குறிப்பிடுகிறது. சரியாகச் சொல்வதென்றால், இதற்கு அர்த்தம், அட்டவணை 10.1, காவல் துறையால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளை மட்டுமே பதிவு செய்திருக்கிறது. முதல் தகவல் அறிக்கை என்பது ஒரு முதலில் பதிவு செய்யப்படும் புகார் ஆகும். அது கண்டிப்பாக உண்மையானதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. பிரச்சனையின் பரிமாணத்தை அல்லது ஆழத்தை பற்றிய தோராயமான பார்வையை மட்டும்தான் முதல் தகவல் அறிக்கைகள் தரும். எனவே, அட்டவணையின் தலைப்பு படிப்பவர்களை

தவறான கண்ணோட்டத்துக்கு அழைத்துச் செல்வதாக இருக்கிறது. அந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள தகவலின் தன்மைக்கு ஏற்ப, இந்திய தண்டனைச் சட்டத்தின் (2003–13) கீழ் குழந்தைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் எண்ணிக்கை என்று தலைப்பிட்டு இருக்க வேண்டும். இந்த கண்ணோட்டத்தில், 2013ல் அட்டவணை 10.1ல் உள்ள தகவல்கள், இந்தியா முழுவதும் பரவலாக சிறாருக்கு எதிராக காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட 31,725 முதல் தகவல் அறிக்கைகள் என்ற ஒரு குறிப்பிட்ட வகையில்தான் புரிந்து கொள்ளப்படவேண்டும். மேலும், உண்மையில் குற்றம் செய்த சிறார் 31,725க்கு மிகக் குறைவாகவே இருப்பார்கள் என்றுதான் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவர்கள் எல்லாருமே பதிவு செய்யப்பட்ட குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் என்று கூறிவிடமுடியாது.

V. அட்டவணை 10.1ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அடிக்குறிப்பு குற்றங்களின் எண்ணிக்கையின் சதவீதத்தை கணக்கிட்டுள்ளதைக் காட்டுகிறது. இது, 2011ம் ஆண்டுக்கான உண்மையான மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் (தற்காலிகமானது) சென்சஸ் 2011 அடிப்படையில் கணக்கெடுக்கப் பட்டுள்ளது. குற்றத்தில் ஈடுபட்ட இளம் சிறார்கள் பற்றிய சதவீதத்தை கணக்கெடுக்கையில் தற்போதைய ஆண்டின் உண்மையான மக்கள் தொகைக்கான ஆதாரம் இல்லாதது என்பதை தான் சந்தித்த சங்கடங்களில் ஒன்றாக தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் அதன் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் ஒரு நிறுவனம் என்பதால் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் இறுதி அறிக்கை 2013ல் தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்துக்கு (NCRB) கிடைத்திருக்கும் என்று ஒருவர் நினைக்கலாம். புள்ளியியல் படி, மக்கள் தொகை பற்றிய இத்தகைய தகவல்கள் குற்றம் சாட்டப்பட்ட இளம் சிறார்களின் சதவீதத்தை கணக்கெடுப்பதை பாதிக்கும். ஏனென்றால் ஒரு நாட்டின் மக்கள் தொகை ஒவ்வொரு ஆண்டும் சில சதவீதம் உயரும் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். இன்னமும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம், நடைபெற்ற குற்றங்களை கணக்கெடுக்கையில் சம்மந்தப்பட்ட மாநிலத்தில் குடியிருக்கும் மக்கள் தொகையின் அடிப்படையில் கணக்கெடுக்க வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு மாநிலத்துக்கும் சூழலியல் மற்றும் வேறுபாடுகள் இருக்கும். அத்தகைய வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

VI. ஒரு குற்றத்தைப் புரிந்தவர் என்று கைது செய்யப்படும் எந்த ஒரு மனிதரும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்படுகிறார். ஒரு நபர் ஈடுபட்ட குற்றச் செயலின் தன்மை குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் ஒரு பிரிவு கூட முழுவதும் விளக்க முடியாது. உதாரணமாக, காயம் ஏற்படக் காரணமான ஒரு சண்டை பற்றிய வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 323–333, 335–338 (குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப) ஆகிய பிரிவுகளில் குற்றம் சாட்டப்படுவார். ஆனால், பின்னர் காயத்தால் பாதிக்கப்பட்டவர் காயத்தின் காரணமாக இறந்துவிட்டால் அதன் விளைவாக குற்றம் சாட்டப்பட்டவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302 ன் கீழ் குற்றம் சாட்டப்படுவார். எனவே, நடந்த குற்றங்களின் எண்ணிக்கை குற்றங்களில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்க வேண்டும். தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் தகவல்கள், இந்த யதார்த்தத்தை படம் பிடித்துக் காட்டுவதில்லை.

குற்றங்களை ஆவணப்படுத்தும்போது தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தால் பின்பற்றப்பட்ட விதியை அதன் மறுப்பு விளக்குகிறது. அதன்படி, ஒரு வழக்கில் பதிவு செய்யப்பட்ட பல குற்றங்களில், மிகவும் கொடூரமான குற்றமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதன் விளைவாக, அது ஒரு வழக்கைத்தான் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. எனவே ஒரு விபத்து மரணத்தில் முடிந்தால், அது புள்ளிவிவரங்களில் மரணமாகக் காட்டப்படுகிறது. மாறாக விபத்தாக அல்ல. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் இளம் சிறார்கள் பற்றிய தகவல்களின் நோக்கம் கடுமையான குற்றங்களை ஆவணப் படுத்துவதுதான் பொதுவான குற்றங்களை ஆவணப் படுத்துவது அல்ல என்று புரிந்து கொண்டால் அது தவறல்ல.

**மறைமுகமான பொருளும் விளைவுகளும்:–** சிறார் நீதித்துறைக்குள் இந்த வகையான அறிக்கையின் மறைமுகமான பொருள் என்னவென்றால், இந்த தகவல்கள் ஒரு தவறான புரிதலைத் தருகிறதோடு கடுமையான குற்றங்களின் எண்ணிக்கையையும் முக்கியத்துவப்படுத்துகிறது. அதன் மூலம் சிறாரால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான குற்றங்கள்

அதிகரித்துள்ளது என்ற தோற்றத்தையும் தருகிறது). மகாராஷ்டிராவிலும் டெல்லியிலும் சட்டத்தோடு முரண்பட்ட சிறார்களுக்கான நீதி வழங்கும் முறையின் நிலை பற்றிய ஒரு ஆய்வை சமூக அறிவியலுக்கான டாடா நிறுவனம் (Tata Institute of Social Sciences - TISS) 2008லும், 2010லும் மேற்கொண்டது. அந்த ஆய்வில் குழந்தைகளால் மட்டும் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை, குழந்தைகள் குழுவாகவோ அல்லது வயது வந்த பிறரோடோ சேர்ந்து செய்த குற்றங்களின் எண்ணிக்கையை விட ஒப்பீட்டளவில் குறைவு என்று கண்டறியப்பட்டுள்ளது.

18வயதுக்கு மேற்பட்ட ஒருவரால் முதன்மையாக மேற்கொள்ளப்பட்ட ஒரு குற்றத்தில் ஒரு குழந்தை கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டாலோ, அல்லது கடுமையான ஒரு குற்றத்தில் ஒரு குழந்தை பகுதியளவு பங்கைச் செலுத்தியிருந்தாலோ, அந்தக் குற்றத்துக்காக 18வயதுக்கு மேற்பட்டோர் மீது எந்த சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படுமோ அதே சட்டப்பிரிவுகளின் கீழ்தான் குழந்தையின் மீதும் வழக்கு பதிவு செய்யப்படும். தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் முதன்மையான குற்ற விதி இத்தகைய சிறாரையும் கடுமையான குற்ற வகையின் கீழ் கணக்கிட்டு கடுமையான குற்றம் புரிந்த இளம் சிறார்களின் எண்ணிக்கையை அதிகப்–படுத்தியிருக்கும். இது எதனால் இருக்கும் என்றால், தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் அட்டவணை 10.3ல் உள்ள தகவல் சிறார், குழந்தைத் திருமணச் சட்டம் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப் பட்டிருக்கிறார்கள். சட்டப்படி, இத்தகைய சட்டங்களின் கீழ் குழந்தைகள் மீது வழக்குப் பதிவு செய்யப்படக்கூடாது.

18 வயதுக்கு மேற்பட்டோர் பற்றிய தகவல்களையும் சிறார் பற்றிய தகவல்களையும் பகுத்தாராய தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் ஒரே அளவுகோலைத்தான் பயன்படுத்துகிறது. இந்த இரு பிரிவினருக்கிடையே உள்ள வேறுபட்ட நடைமுறைகள், கண்ணோட்டம் மற்றும் சிந்தனைப்போக்கு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு பார்த்தால், தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தால் பின்பற்றப்படும் நடைமுறை நியாயமானதாக இல்லை. அறிக்கையின் வெவ்வேறு அத்தியாயங்களில் உள்ள அட்டவணைகளை வேகமாகப் பார்த்தாலே இந்தக் கருத்து தெளிவாகப் புரியும். அந்த அட்டவணைகளைத் தொடர்ந்து உள்ள ஆய்வும் தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் நியாயமற்ற போக்கையே எடுத்துக்காட்டுகிறது. அது கீழே விவாதிக்கப்பட்டுள்ளது.

சிறார் நீதித்துறையில், சிறார்கள் புரிந்த குற்றத்தின் தன்மையையும் அவர்களின் வயதையும் மட்டும் குறிப்பிட்டால் போதாது. குற்றத்தில் சிறாரின் பங்கைப் புரிந்து கொள்வதும் அதே அளவுக்கு முக்கியாகும். அதாவது, இளம் சிறுவனோ சிறுமியோ அந்தக் குற்றத்தை தனியாகப் புரிந்தனரா, அல்லது 18 வயதுக்கு மேற்பட்டவர்களோடு சேர்ந்து செய்தனரா அல்லது குழுவாகச் செய்தனரா என்று பார்க்க வேண்டும். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 34ன்5 கீழ் எத்தனை இளம் சிறார்கள் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள் என்று ஆராய்வது முக்கியம். சார்பியல் ரீதியாக இந்த எண்ணிக்கை அனைத்து வகையிலும் வேறுபட்ட ஒரு புள்ளிவிவரத்தை நமக்கு காண்பிக்கும். தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் தகவல் அதன் அறிக்கையின் அத்தியாயம் 10ல் உள்ள ஆய்வில் மேலே குறிப்பிட்ட அம்சத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 34ஐ பற்றிய ஆய்வு இல்லாததின் மறைமுக விளைவை, அட்டவணை 10.26லும் அட்டவணை 10.37லும் காணலாம். நம்பிக்கை மீறும் குற்றம் (இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 406–409); போலி (231–254,489A 489D இந்திய தண்டனை சட்டம்); வரதட்சணை சாவுகள் (இந்திய தண்டனைச் சட்டம் 304 B); கணவன் அல்லது அவனது உறவினர்களின் சித்ரவதை (இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498A); ஆயுதங்கள் சட்டம், சூதாட்டச் சட்டம், வெளிநாட்டினர் சட்டம்; பாலியல் தொழிலுக்காக கடத்தல் (தடுப்பு) சட்டம், இந்திய பாஸ்போர்ட் சட்டம், அத்தியாவசியப் பொருள்கள் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், வனச் சட்டம், வெளிநாட்டிலிருந்து பெண் குழந்தைகளை கடத்துதல் (இந்திய தண்டனைச் சட்டம் 366B), சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்; அனைத்து பட்டியல் சாதியினருக்கும், பட்டியல் பழங்குடியினருக்கும் சதி நடவடிக்கை (தடுப்பு) சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையை இந்த இரு அட்டவணைகளும் பிரதிபலிக்கின்றன.

உண்மையில், சிறார்கள் சதி நடவடிக்கை (தடுப்பு) சட்டம், அத்தியாவசியப் பொருள்கள் சட்டம் அல்லது குழந்தைத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களில் குற்றம் சாட்டப்படக்கூடாது. ஒருவேளை ஒரு சிறார் இத்தகைய சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டால், அந்தக் குழந்தை மீது அத்தகைய குற்றம் போலியாக சித்தரிக்கப்பட்டது என்று அர்த்தம் அல்லது அக்குழந்தை 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவரோடு இணைந்து அத்தகைய குற்றங்களைப் செய்திருக்கிறது என்று



http://media2.intoday.in/aajtak/images/stories/052015/child_crime-650_050815045055.jpg

அர்த்தம்; முதன்மைச் சட்ட விதியின் விளைவாக, சிறாருக்கு மிகக் கடுமையான குற்றத்தில் ஒரு பங்கு இல்லாமல் கூட அத்தகைய குற்றங்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை வாசகர்கள் அட்டவணை 10.2 மற்றும் 10.3ல் குறிப்பிட்டுள்ள சட்டங்களின் கீழான குற்றங்களை சிறார்கள் செய்ய முடியுமா முடியாதா என்று விவாதிக்கலாம். அட்டவணை 10.88ல் உள்ள அத்தகைய குற்றங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள குழந்தைகளின் வயதைப பற்றி நான் விவாதிக்க விரும்புகிறேன். அதன் பிறகு வாசகர்கள் இந்தக் குழந்தைகள் இளம் குற்றவாளிகளா அல்லது சமூகச் சூழலினால் பாதிக்கப்பட்டவர்களா என்பதைப் பற்றிய ஒரு தெளிந்த முடிவுக்கு வரலாம். அவை,

(1) 7 மற்றும் 12 வயதுடைய இரண்டு சிறுவர்கள் வனச் சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

(2) 7லிருந்து 12 வயதுடைய 50 சிறுவர்கள் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

(3) 12 வயதிலிருந்து 16 வயதுடைய 4 சிறுமிகள் பாலியல் வன்புணர்ச்சிக்கு துணை புரிந்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

(4) 7லிருந்து 12வயதுக்குள் இருக்கும் ஒரு சிறுவன் கொள்ளையில் ஈடுபட்டான் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறான்.

(5) 7லிருந்து 12 வயதுடைய ஒரு சிறுமி, 13 வயதிலிருந்து 15 வயதுடைய இரண்டு சிறுவர்களும் ஒரு சிறுமியும் மற்றும் 16 வயதிலிருந்து 17வயதுடைய 5 சிறுவர்கள் குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். (c) தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் (NCRB) பாலியல் வன்புணர்ச்சி என்ற தலைப்பின் கீழ் இரண்டு துணைத் தலைப்புகளைக் கொண்டுள்ளது. அது காவல் வன்புணர்ச்சி மற்றும் பிற வன்புணர்ச்சி. இந்த வகைப் பிரிவுகள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் வன்புணர்ச்சியைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.

இளம் சிறார் நீதி அமைப்புக்குள் காவல் வன்புணர்ச்சிகள் பொருந்தாது. ஏனென்றால் சிறுமிகள்தான் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது, ஆனால் குழந்தைகள், அதிலும் குறிப்பாக, பெண் குழந்தைகள் காவல் நிலையங்களில் இரவு நேரத்தில் தங்க வைக்கப்படுவதில்லை. தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் அறிக்கையில் கடந்த 5 ஆண்டுகளாக இந்த தலைப்பின் கீழ் எந்த எண்ணிக்கையும் குறிப்பிடப்படவில்லை. காதலிக்கும் 18 வயதுக்கு கீழ் உள்ள வளரிளம் குழந்தைகள் தாங்கள் விரும்பி உடலுறுவில்

ஈடுபட்டால் அதுவும் வன்புணர்ச்சி என்று குற்றம் சாட்டப்படும் சூழல் நிலவுகிறது. அதனால், சிறார் நீதி வாரிய அமைப்பில் வன்புணர்ச்சி என்ற தலைப்பின் கீழ் வன்புணர்ச்சி மற்றும் உறவுக்குள்ளே விருப்பப்பட்டு ஈடுபடும் புணர்ச்சி ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டக்கூடிய வகையில் துணைத் தலைப்புகள் இருக்க வேண்டும்.

ஆங்கில நாளிதழ் 'தி இந்து'வில் வெளியான ''தில்லியில் பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளின் பல பரிமாணங்கள்'', ''நமது கொடூர சமூகத்தில் இள வயது காதல்கள் வன்புணர்ச்சியாக சித்தரிக்கப்படுகின்றன,'' மற்றும் ''பாலியல் வன்புணர்ச்சி வழக்குகள்: திருத்தப்பட்ட முதல் தகவல் அறிக்கைகள் நீதிமன்றத்தில் தோற்றுப் போகின்றன'' என்ற தலைப்பிலான மூன்று கட்டுரைகள், டெல்லியில் பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளில் வழங்கப்பட்ட இணையவழி தீர்ப்புகளின் அடிப்படையில் மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சனையைப் பற்றி விவாதிக்க முயற்சித்தன. இந்த ஆய்வின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த, இந்த ஆய்வு எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்ற வழிமுறை நாளிதழில் வெளியிடப்பட்டது.

கெடுவாய்ப்பாக, இந்தப் பிரச்சனை தொடர்பாக ஒரு முறையான ஆய்வுகள் நடத்தப்படாததால், இத்தகைய கண்டறிதல்கள், இந்தத் துறையில் பணிபுரிபுவர்களின் அனுபவங்கள், நாளிதழ் அறிக்கைகள் ஆகியவற்றையே ஒருவர் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. சிறார் நீதித்துறையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் பற்றிய விவரம் இரகசியமாக வைக்கப்படவேண்டும் என்பதால் இந்தியாவில், சட்டத்தோடு முரண்படும் இளம் சிறார்கள் பற்றிய ஆய்வு ஒரு எல்லைக்கு உட்பட்டதாகவே உள்ளது. கைது செய்யப்பட்டு (இந்திய தண்டனைச்சட்டம் மற்றும் SLL குற்றங்களின் கீழ்) 2013 ம் வருடத்தில் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்ட சிறார் தொடர்பான வழக்குகள் பற்றிய அட்டவணை 10.13, சிறார் நீதி அமைப்பால் (JJB) அளிக்கப்பட்ட வெவ்வேறு வகையான இறுதி ஆணைகளின் எண்ணிக்கையைத் தெரிவிக்கிறது. இந்த அட்டவணையில் இரண்டு விஷயங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

(அ) இந்த அட்டவணை முறையான தலைப்பைக் கொண்டிருக்கவில்லை. தள்ளுபடி செய்யப்பட்ட மற்றும் நீதிமன்றங்கள் போன்ற வார்த்தைகள் அதன் முழு அர்த்தத்தில் இல்லாமல் மிகவும் சாதாரணமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதி ஆணைகள், சிறார் நீதி அமைப்பு (JJB), அல்லது வெறும் அமைப்பு ஆகியவையே சட்டப்படியான, முறையான வார்த்தைகளாகும். புள்ளியியலாளர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளிலும் அட்டவணைக்கு அளிக்கும் தலைப்புகளிலும் துல்லியமாக இருக்கவேண்டும். ஏனென்றால் அவை, எந்த கண்ணோட்டத்திலிருந்து படிக்கப்படுகின்றனவோ அந்தக் கண்ணோட்டத்தையே முழுமையாக மாற்றிவிடும்.

(ஆ) 2013ல் மகாராஷ்டிராவில் உள்ள இரண்டு சிறப்பு விடுதிகளுக்கு அனுப்பப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை உறுதி செய்வதற்காக நான் அந்த இரண்டு விடுதிகளுக்கு மட்டும் கடிதம் எழுதினேன். கிடைத்த தகவலின்படி, அங்கு தங்கியிருந்தவர்கள் 21 பேர், அனுப்பப்பட்டவர்கள் 9 பேர் ஆக மொத்தம் 30 பேர். மகாராஷ்டிராவில் உள்ள சிறுமிகளுக்கான ஒரே விடுதி மற்றும் நாசிக்கில் உள்ள பார்ஸ்டல் பள்ளி ஆகியற்றுக்கு அனுப்பப்பட்ட சிறுமிகளையும் சேர்த்தால்கூட 100 பேர் என்ற எண்ணிக்கை வராது.

தவிர, TISS செய்த ஆய்வில், சிறார் நீதி அமைப்பின் இறுதி ஆணைகளின் நகல், அந்த வழக்கோடு தொடர்புடைய காவல் நிலையங்களுக்கு எப்போதும் கொடுக்கப்படுவதேயில்லை. இளம் சிறார் நீதி அமைப்பு கூட தான் வழங்கிய இறுதி ஆணைகள் பற்றி மாதாந்திர அடிப்படையில் அல்லது வருடாந்திர அடிப்படையில் அலசி ஆராயவோ அல்லது அவற்றைப் பதிவு செய்வதோ இல்லை. அத்தகைய பணிகளுக்கான மனித சக்தி, சிறார் நீதி அமைப்பிடம் இல்லாததே காரணம். எனவே TISS ஆய்வாளர்கள் ஒவ்வொரு கோப்பையும் (பைல்) படித்து ஒவ்வொரு வழக்கிலும் கொடுக்கப்பட்ட இறுதி ஆணைகள் பற்றி குறிப்பு எடுக்கவேண்டியிருந்தது.

இந்த நிலை குறைந்தபட்சம் மகாராஷ்டிராவைப் பொறுத்த மட்டில் இன்னமும் மாறவில்லை, ஏனென்றால் இந்தக் கட்டுரையின் ஆசிரியர் மகாராஷ்டிரா மாநிலத்தின் சிறார் நீதி அமைப்போடு நெருக்கமாக தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். இந்த கண்ணோட்டத்தின் அடிப்படையில், தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்தின் (NCRB) தகவலின்படி 2013ல் மகாராஷ்டிராவில் உள்ள சிறப்பு விடுதிகளுக்கு 2,224 சிறார்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். காவல்துறையில் இந்தத் தகவல் இல்லாதபோது தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனத்துக்கு இத்தகைய தகவலை அவர்கள் எப்படி அளிக்க முடியும்?. இது, அட்டவணை 10.13ல் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கைகளின் நம்பகத்தன்மை பற்றிய கவலையை எழுப்புகிறது. மேலும் வேறு அட்டவணைகளில் உள்ள எண்ணிக்கைகளைப்

இதன் தொடர்ச்சி பக்கம் 25ல்...

# சுமையின்றி கற்றல்

*(மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட தேசிய ஆலோசனைக் குழுவின் அறிக்கையிலிருந்து)*

**– பேரா. யாஷ்பால் ஷர்மா**

நமது நாட்டில் மாணவர்கள் மீது சுமத்தப்படும் கல்விச் சுமை தொடர்பாகவும், மனநிறைவு தராத கற்றல் தரம் குறித்தும் கடந்த 20 ஆண்டு காலமாக திரும்பத் திரும்பக் குரல் எழுப்பப்பட்டு வந்தது. பல்வேறு குழுக்களாலும், அமைப்புகளாலும் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வந்துள்ளது. ஐஷ்வர்பாய் படேல் ஆய்வுக் குழு (1977), NCERT நடவடிக்கைக் குழு (1984), NPE ஆய்வுக் குழு (1990) ஆகிய குழுக்கள் மாணவர்களின் கல்விச் சுமையைக் குறைப்பதற்கான பல பரிந்துரைகளைச் செய்துள்ளன. பாடத்திட்ட மேம்பாட்டு அமைப்புகள் பொதுவாக இக்குழுக்களின் பரிந்துரைகளோடு உடன்படுகின்றன. அடுத்த பாடத்திட்ட மறுஆய்வின்போது இப்பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதியளிக்கின்றன. ஆனால் ஒரு புதிய பாடத்திட்டம் கொண்டு வரப்படும்போது பிரச்சனைத் தீர்வதற்கு மாறாக மேலும் தீவிரமாகவே செய்கிறது. தேசிய கல்விக் கொள்கை (1986) செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து புதிய பாடத்திட்டம் கொண்டு வரப்பட்டபோது இதுதான் நடந்தது. கல்வி சார்ந்த பிரச்சனைகளை, குறிப்பாக, மாணவர்கள் மீதான கல்விச் சுமைப் பிரச்சனையை, புதிதாக ஆய்வு செய்வதற்காக இந்திய அரசின் மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம் ஒரு தேசிய ஆலோசனைக் குழுவை 1992 மார்ச் மாதம் அமைத்தது. அதற்குப் பின்வரும் பணி வழங்கப்பட்டது:



http://www.thehindu.com/multimedia/dynamic/02052/12TH_CHILDREN__2052377f.jpg

"ஆயுட்கால சுய கற்றல் திறன் மற்றும் திறமை உருவாக்கம் உள்பட கற்றலின் தரத்தை மேம்படுத்துகையில், அனைத்து மட்டங்களிலும் பள்ளிக் குழந்தைகளின் மீதான, குறிப்பாக இளம் மாணவர்களின் மீதான சுமையைக் குறைப்பதற்கான வழிகள் குறித்து ஆலோசனைக் கூறுவது."

குழு தனது பணியைத் தொடங்குவதற்கு முன்பாகத் தனது பணிக்கான அளவுகோல்களையும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கான வழிமுறையையும் முடிவு செய்தது. தேசிய அளவிலான தொலைநோக்குப் பார்வையுடன் இக்குழு தனது பணியை மத்திய பள்ளிக் கல்வி வாரியத்துடனோ (சிபிஎஸ்இ), NCERT பாடத்திட்டத்துடனோ அல்லது பாடப் புத்தகங்களுடனோ சுருக்கிக் கொள்ள வேண்டியதில்லை என்றும், பல்வேறு மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் பயன்படுத்தப்பட்ட பாடப் புத்தகங்களையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்தது. இரண்டாவதாக, கண்ணோட்ட ஆய்வுகள், ஆசிரியர்களோடு நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைகள், பாடப் புத்தகங்கள் மற்றும் இதர கல்விப் பயிற்சிக்கான பொருள்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் மூலமாகப் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தனது பரிந்துரைகளை முன்வைப்பது என்றும் குழு முடிவு செய்தது. மூன்றாவதாக, புத்தாக்கத் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்கள்/அமைப்புகளின் பணிகளைப் பரிசீலிக்கவும் குழு முடிவு செய்தது.

NCERT -யின் சில ஆசிரியர்களைக் கொண்டு முதல் கட்ட ஆலோசனை நடத்தப்பட்டது. அதன் பிறகு தில்லி, திருவனந்தபுரம், புனே, கொல்கத்தா ஆகிய நான்கு நகரங்களில், பல்வேறு மாநிலங்களையும் சார்ந்த

பள்ளிகளின் முதல்வர்கள், ஆசிரியர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. புதிய திட்டங்களைச் செயல்படுத்துகிற தன்னார்வு நிறுவனங்கள், பாடத் திட்டங்களை வரைவோர், பாடங்களை எழுதுவோர், தனியார் பதிப்பாளர்கள், பள்ளிக் கல்வி வாரியங்களின் தலைவர்கள் ஆகியோர்களுடனும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**தனிநபர் சாதனைக்காகப் பரிசளிக்கிற போட்டிகளை ஊக்குவிப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில், அது குழந்தைகள் மகிழ்ச்சிகரமாகக் கற்கும் ஆர்வத்தைப் பறித்துவிடுகிறது. அதேவேளையில், கூட்டுச் செயல்பாடுகளும், கூட்டுச் சாதனைகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும்,**

மும்பை, நாசிக், பரோடா, கொல்கத்தா நகரங்களில் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்ற கூட்டங்களையும் குழுவின் சில உறுப்பினர்கள் நடத்தினர், மும்பை, தில்லி நகரங்களில் வினாத் தாள்களின் அடிப்படையில் ஆசிரியர்கள், பெற்றோர்களின் கருத்துகள் பெறப்பட்டன. மாணவர்கள் மீது எந்திரத்தனமாகத் திணிக்கப்படும் பணிச்சுமைகள் பற்றிய பார்வையோடு, பள்ளிக் கல்வி சார்ந்த பிரச்சனைகளை ஆராய்கிற இந்த முயற்சியில் நாடு முழுவதையுமே ஈடுபடுத்துகிற நோக்கத்துடன் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் கருத்துகளும் ஆலோசனைகளும் கோரப்பட்டன.

அதற்காக, பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. அகில இந்திய வானொலியிலும், தூர்தர்ஷன் தொலைக்காட்சியிலும் சிறப்பு அறிவிப்புகள் செய்யப்பட்டன. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், குழந்தைகளின் கல்வியில் அக்கறையுள்ள துறை சார்ந்தோர் ஆகியோரிடமிருந்து குழுவிற்கு 600க்கும் மேற்பட்ட மனுக்களும் கடிதங்களும் கட்டுரைகளும் வந்தன. இது பற்றிய புரிதல் உள்ளவர்களுடன் நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைகள், நடைமுறையில் இருந்த கல்விப் பயிற்சிக்கான பல்வேறு பொருள்கள் குறித்த மதிப்பீடுகள், ஆசிரியர்களிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் வந்த கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் நடப்பு கல்வி முறைச் செயல்பாடு குறித்த ஒரு புரிதலுக்குக் குழுவால் வர முடிந்தது. அந்த அடிப்படையிலேயே குழு தனது பரிந்துரைகளை உருவாக்கியது.

குபவின் பணியில் ஏராளமான ஆசிரியர்கள், பள்ளி முதல்வர்கள், பாடத் திட்ட – பாடப் புத்தக எழுத்தாளர்கள் ஆகியோரிடமிருந்தும், சங்கங்களிடமிருந்தும், துறைகளிடமிருந்தும் ஒத்துழைப்புக் கிடைத்தது. எமது பணியில் அவர்களது பங்களிப்பை நன்றியறிதலுடன் நாங்கள் அங்கீகரிக்கிறோம். குறிப்பாக, தில்லியில் உள்ள மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றத்துக்கு (SCERT) நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அங்கேதான் குழுவின் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. அவர்களிடமிருந்து அனைத்துவிதமான நிர்வாக ஆதரவுகளும் எங்களுக்குக் கிடைத்தன. அது எங்களுடைய பணிக்கு மிகப் பெரிய அளவிற்கு உதவிகரமாக அமைந்தது. குழுவின் கூட்டங்களை நடத்துவதற்கு உதவியாக நிதி ஏற்பாடு மற்றும் இதர வசதிகளைச் செய்து கொடுத்த NCERT அமைப்புக்கும் அதன் சமூக அறிவியல் மற்றும் மானுடவியல் துறைக்கும் நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

திருவனந்தபுரம், புனே, கொல்கத்தா ஆகிய நகரங்களில் மண்டல கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்திக் கொடுத்த கேரளம், மஹாராஷ்டிரா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் கல்வித்துறைகளும், அந்த மாநிலங்களின் NCERT கள அலுவலர்களது பணிகளும் பாராட்டுக்குரியவையாகும். குழு உறுப்பினர்களோடு தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட அல்லா ரிப்பு, திகந்தர், ஏகலைவா ஆகிய தன்னார்வு அமைப்புகளும் சிறப்பு நன்றிக்குரியவையாகும். நேயர்கள் தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு உதவியாக அறிவிப்புகளை வெளியிட்ட தூர்தர்ஷன், ஆகாஷ்வாணி அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்தாக வேண்டும். அனைத்திற்கும் மேலாக, எங்களது அழைப்பை ஏற்று, பெருமளவுக்குத் தங்களது பகுதிகளில் நடத்தப்பட்ட கூட்டங்கள்/ பயிலரங்குகளுக்குப் பிறகு தமது கருத்துளை எழுத்துப்பூர்வமாக அனுப்பிய நூற்றுக்கணக்கான பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்

ஆகியோருக்கும் நாங்கள் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். ஆலோசனைக் கூட்டங்களின் விவாதக் குறிப்புகள், ஆவணங்கள், இறுதியாக அறிக்கை ஆகியவற்றைத் தட்டச்சு செய்து கொடுப்பது உள்ளிட்ட அனைத்து விதமான செயலக உதவிகளையும் செய்த, தில்லி, SCERT தட்டச்சு ஊழியர் மீனு தனேஜா இதில் குறிப்பிடத்தக்கப் பங்களித்திருக்கிறார்.

## பரிந்துரைகள்

பள்ளிக் குழந்தைகள் மீது ஏற்றப்படும் சுமைகள் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புடன் பாடத்திட்டத்தை வகுத்தோர் அல்லது போதிய பயிற்சியற்ற ஆசிரியர்கள் அல்லது பள்ளிகளின் நிர்வாகிகள் அல்லது புத்தகங்களின் பதிப்பாளர்கள் அல்லது மாவட்ட – மாநில – மத்திய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து மட்டுமே வந்தவையல்ல என்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம். ஆம், இந்த அமைப்புகள், நிறுவனங்கள், நிர்வாகங்கள் என்ன செய்கின்றன என்பதைப் பொறுத்து பிரச்சனை அதிகரிக்கக்கூடும் அல்லது தீர்க்கப்படக்கூடும். ஆனாலும், நமது சமுதாயத்திலேயே ஆழமான சிக்கல் இருக்கிறது. அது நமது இளம் குழந்தைகளைப் பாதிக்கிறது. வாழ்க்கையில் பயனுள்ள செயல்களைச் செய்வதற்குத் தேவைப்படுகிற உண்மையான தகுதிகளை விட்டுவிட்டு, சில மேல்தட்டுத் தகுதிகளை மட்டுமே நாம் மதிக்கத்தக்கவையாக ஏற்றுக்கொள்வோம் என்றால், கல்வி சார்ந்த சில முட்டுக்கட்டைகளை தாண்டக்கூடியவர்களுக்கும் அப்படித் தாண்ட இயலாதவர்களுக்கும் இடையேயான பொருளாதார இடைவெளி தொடர்ந்து விரிவடையும் என்றால், நாம் தொடர்ந்து குழந்தைகளுக்குத் தடைகளை ஏற்படுத்துவதில்தான் நமது முயற்சிகளை செலவிட்டுக் கொண்டு இருப்போமேயன்றி, மகிழ்ச்சியோடு அவர்கள் கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த மாட்டோம். அறிக்கையின் பிரதானப் பகுதியில், அறிவுத் திணிப்பு, வேகமான முயற்சி என்ற நோய்க்குறிகளோடு பிரச்சனையின் பெரும்பகுதி சம்பந்தப்பட்டிருப்பது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. எளிதாகக் கையாளக்கூடிய நிர்வாக நடவடிக்கைகள் மூலமாக மட்டுமே இந்தப் பிரச்சனைக்கு முழுமையாகத் தீர்வு காண முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். இவை குறித்து விரிவான விவாதங்கள் தேவைப்படுகின்றன. ஏனெனில், இவை நமது நாகரீகத்தின் சுயகௌரவம், சமூக இலக்குகள் ஆகியவை சார்ந்த பிரச்சனைகளோடு பிரதானமாக சம்பந்தப்பட்டுள்ளன. இந்த அறிக்கையை வெளியிடுவதன் மூலமாகவும், தொடர்ச்சியாகக் கருத்தரங்குகள், ஆலோசனைக் கூட்டங்கள், ஊடக விவாதங்கள் ஆகியவற்றை நடத்துவதன் மூலமாகவும் அத்தகைய விரிவான விவாதத்தை மேற்கொள்ள முடியும். இந்த அடிப்படையான பிரச்சனை குறித்துக் கல்வியாளர்களும், சிந்தனையாளர்களும் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும்.

நமது சமுதாயத்தில் செல்வாக்கோடும் வெளித் தொடர்புகளோடும் உள்ள பிரிவுகளைச் சேர்ந்தோர், நமது தொடக்க நிலைப் பாடங்கள் நமது குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பாக தமது வளர்ச்சியில் ஒவ்வொரு வாரமும் உள்வாங்குகிற “வட்டார” அறிவுடன் தொடர்புள்ள மொழியில் அல்லாமல் ஒரு வெளிநாட்டு மொழியில்தான் இருக்க வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் அளிப்பது தொடரும் வரையில், பயிற்று மொழிப் பிரச்சனை, குறிப்பாக, வாழ்க்கையின் தொடக்கக் கட்டத்தில், முழுமையாகத் தீர்ந்துவிடாது. இந்தக் காரணத்துக்காகத்தான் நாங்கள், தொடக்கப்பள்ளி நிலையில் தாய்மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற பரிந்துரையை மீண்டும் முன்வைப்பதிலிருந்து எங்களை நாங்களே வரையறைப்படுத்திக் கொண்டுள்ளோம்.

1. மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், தேசிய அளவிலும் மாணவர்களுக்காகப் பள்ளிப் பாடங்கள், கண்காட்சிகள், கட்டுரை எழுத்தாக்கங்கள், சொற்பொழிவுகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பல்வேறு அமைப்புகளும் துறைகளும் போட்டிகளை நடத்துகின்றன. பல்வேறு மாறுபட்ட துறைகளில் திறமைகளை அங்கீகரித்துப் பரிசளிப்பதே இத்தகைய முயற்சிகளின் நோக்கமாக இருக்கக்கூடும். ஆனால், ஒரு கெடுவாய்ப்பாக, ஒரு தற்காலிகச் சிறப்புக்காக, இவர்கள் தனிமைப்படுத்தப்படுகிற ஆரோக்கியமற்ற போக்கு உருவாகிறது. தனிநபர் சாதனைக்காகப் பரிசளிக்கிற போட்டிகளை ஊக்குவிப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில், அது குழந்தைகள் மகிழ்ச்சிகரமாகக் கற்கும் ஆர்வத்தைப் பறித்துவிடுகிறது. அதேவேளையில், கூட்டுச் செயல்பாடுகளும், கூட்டுச் சாதனைகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும், அவற்றிற்குப் பரிசளிக்கப்பட வேண்டும். அதன் மூலம் பள்ளிகளில் கூட்டுறவாக ஒத்துழைத்துக் கற்பது மேலோங்கும்.

2. (a) பாடத்திட்டங்களை வகுப்பது, பாட நூல்களைத் தயாரிப்பது என்ற நடைமுறைகள் பரவலாக்கப்பட வேண்டும். அதன்மூலம் இப்பணிகளில் ஆசிரியர்களின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும். அதிகாரப் பரவல் என்பது மாநில அளவிலான அமைப்புகளுக்கு உள்ளேயும், மாவட்ட அளவிலான வாரியங்களுக்கு

உள்ளேயும், இதர பொருத்தமான அதிகார அமைப்புகளிலும், பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும், வகுப்பாசிரியர்களும் கூடுதல் தன்னாட்சி அதிகாரங்களை வழங்குவதாக இருக்க வேண்டும். அவர்கள், வட்டார நிலைமைகளுக்கு ஏற்ப வகுப்பறைக்கு உள்ளூர்ச் சூழல், பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் அவைகளுக்கான பாட உபகரணங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்ளத் தக்க அளவிற்கு அதிகாரப் பரவலாக்கம் இருக்க வேண்டும். பாட நூல்களையும் இதர விஷயங்களையும் தேர்ந்தெடுப்பது உள்பட பாடத் திட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் ஊக்கப்படுத்தக் கூடிய அளவிற்குப் புதிய சிந்தனைகளைச் செயல்படுத்த அனைத்துப் பள்ளிகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

(b) முறைசார்ந்த கல்வியிலும், முறைசாராக் கல்வியிலும் பயிற்சி முறை தொடர்பான புதிய கண்டுபிடிப்புகளில் குறிப்பான ஈடுபாட்டுடன் செயல்படுகிற தன்னார்வு அமைப்புகளுக்கு பாடத்திட்டத்தையும், பாட நூல்களையும், ஆசிரியர் பயிற்சியையும் மேம்படுத்துவதில் அதிக சுதந்திரமும், ஆதரவும் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய அமைப்புகளின் அனுபவங்களை விரிவாகப் பகிர்ந்துகொள்வதற்காக ஒரு பொருத்தமான, போதுமான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(c) கிராம அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் கல்விக் குழுக்களை அமைப்பது, அவற்றின் செயல்வரம்புக்கு உட்பட்ட பகுதிகளில் பள்ளிகளுக்குத் திட்டமிடுவது, அவற்றைக் கண்காணிப்பது ஆகிய பொறுப்புகளை அவற்றிடம் விடுவது என்ற ஆலோசனையை நாங்கள் வழிமொழிகிறோம்.

(d) பயிற்சிக் கருவிகளை வாங்குவதற்கும், பழுது நீக்குவதற்கும், புதிதாக மாற்றுவதற்கும் ஏற்ற வகையில் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களது பொறுப்பில் போதுமான அளவிற்கு அவசர கால நிதி (பள்ளியின் மொத்த ஊதியத்தில் 10 சதவீதத்திற்குக் குறையாத தொகை) ஒப்படைக்கப்பட வேண்டும்.

3. பாடப் புத்தகங்களை எழுதுகிற கலாச்சாரம் மாற்றப்பட வேண்டும். பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதில் மிக அதிகமான ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதில் அறிவியலாளர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் ஆகியோரின் உதவிகளைப் பெறலாம். ஆனால் அவர்களே புத்தகங்களை எழுதுபவர்களாக இருக்க வேண்டியதில்லை. இது தொடர்பான முயற்சிகள் கற்றறிந்த, புதிய சிந்தனைகள் உள்ள ஆசிரியர்களது குழுக்களின் பொறுப்பில் விடப்பட வேண்டும். அவர்களுக்குப் புத்தகம் எழுதுவதில் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

4. பல்வேறு மாநிலங்களில் (பாடத் திட்டம், பாடப் புத்தகங்கள், தேர்வுகள் ஆகியவற்றில்) குறைந்தது மூன்று வகையான பள்ளிக் கல்வி முறைகள் செயல்படுத்தப் படுகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் பெரும்பாலான பள்ளிகள் மாநிலக் கல்வி வாரியத்துடன் இணைந்துள்ளன. சில பள்ளிகள், சிபிஎஸ்இ அல்லது இந்திய பள்ளித் தேர்வு சான்றிதழ் மன்றம் (CISCE) ஆகியவற்றுடன் இணைந்துள்ளன. தில்லி மட்டுமல்லாமல் இதர மாநிலங்களிலும், சிபிஎஸ்இ–யுடன் இணைந்துள்ள பள்ளிகள் உயர்தரமானவையாகக் கருதப்படுகின்றன. சிபிஎஸ்இ பாடத்திட்டம் மாநில வாரியங்களுக்கான முன்மாதிரியாகிறது. இதனால், பெரும்பாலான குழந்தைகளின் மீது பெரும் பாடச்சுமை ஏற்றப்படுகிறது. ஆகவே, சிபிஎஸ்இ அதிகார வரம்பு கேந்திரியப் பள்ளிகளுடனும், நவோதயா பள்ளிகளுடனும் மட்டுமே வரையறுக்கப்பட்டதாக இருக்க முடியும். மற்ற பள்ளிகள் அனைத்தும் அந்தந்த மாநில வாரியங்களுடன் இணைந்ததாக இருக்க வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது.

5. (a) பள்ளிக்கு முந்தைய குழந்தைப்பருவ கல்வி நிறுவனங்களை (மழலையர் பள்ளிகள்) தொடங்குவது அவற்றின் செயல்பாடு ஆகியவற்றை முறைப்படுத்துவதற்காக உரிய சட்டப்பூர்வ ஏற்பாடுகளும் நிர்வாக ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய பள்ளிகளை அங்கீகரிப்பதற்கு அவற்றின் மாணவர் சேர்க்கை, ஊழியர்கள், கல்விப்பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள் ஆகியவை தொடர்பான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். வாசித்தல், எழுதுதல், எண்கள் ஆகியவற்றைக் கற்றுக்கொடுப்பது என்ற வழக்கமான வடிவங்களில், இளம் குழந்தைகள் மீது அளவுக்கு மீறிய கல்வியைப் திணிக்கின்ற வன்முறையில் இத்தகைய பள்ளிகள் ஈடுபட அனுமதி இல்லை என்பது

உறுதிப்படுத்தப்பட வேண்டும். மழலையர் வகுப்புகளில் சேர்ப்பதற்கு தேர்வு நடத்துவது, நேர்காணல் நடத்துவது ஆகிய நடைமுறைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

(b) தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பான விதிமுறைகள் கறாராக்கப்பட வேண்டும். இது ஒருபக்கத்தில் கற்றலின் தரத்தை மேம்படுத்தவும், இன்னொரு பக்கத்தில் அதிகரித்து வரும் கல்வி வணிகத்தை கட்டுப்படுத்தவும் வழி வகுக்கும். இவ்வாறு உருவாக்கப்படும் விதிறைகள், அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிகள் உட்பட அனைத்து பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியாகப் பொருந்துவதாக்கப்பட வேண்டும்.

6. தினந்தோறும் பள்ளிக்கு பளுவான புத்தகப்பைகளை சுமந்து வருமாறு இளம் குழந்தைகளை கட்டாயப் படுத்தி சித்ரவதைக்கு உள்ளாக்குவதை நியாயப்படுத்த முடியாது. பாடபுத்தகங்கள் பள்ளியின் சொத்துகளாகப் பராமரிக்கப்பட வேணடும். அதன் மூலம் குழந்தைகள் தனித்தனியே அந்த புத்தகங்களை வாங்க வேண்டிய, தினமும் வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவை ஒழிக்கப்பட வேண்டும். வீட்டுப்பாடங்கள், பாடப்புத்தகங்களையும் நோட்டுப்புத்தகங்களையும் பயன்படுத்துதல் ஆகியவை தொடர்பான தனியான கால அட்டவணை பள்ளிகளால் தயாரிக்கப்பட்டு, குழந்தைகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும்.

7. வீட்டுப்பாடத்தின் இயல்பிலும் தன்மையிலும் ஒரு முற்போக்கான மாற்றம் தேவைப்படுகின்றது. தொடக்கப்பள்ளி வகுப்புகளில் குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் தரக்கூடாது. விதிவிலக்காக, வீட்டுச்சூழலில் புதியவற்றை தெரிந்து கொள்கிற பயிற்சி மட்டுமே விரிவுபடுத்தப்பட வேண்டும். நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளில், தேவைப்படும் நிலையில், வீட்டுப்பாடம் தரப்படலாம். அது பாடம் சாராததாக இருக்க வேண்டும். வீட்டில் அதற்காக பாடப்புத்தகங்கள் தேவைப்படுமானால் சுழற்சி முறையில் அவற்றை வழங்கலாம்.

8. ஆசிரியர் – மாணவர் விகிதாச்சாரம் தொடர்பாக தற்போதுள்ள விதிமுறை (1 : 40) செயல்படுத்தப்பட வேண்டும். எதிர்காலக் கல்வித் திட்டத்திற்கான ஒரு அடிப்படையாக, இந்த விகிதாச்சாரத்தை 1 : 30 என, குறைந்தது தொடக்கப் பள்ளி அளவிலாவது, குறைப்பதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. நாட்டில் குழந்தைகளை மையமாகக் கொண்ட சமூக நெறிகளை உருவாக்குவதற்காக, மின்னணு ஊடகம் மிகப் பெரிய அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான தொடர்ச்சியான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், 'க்ருஷி தர்ஷன்' (விவசாய தரிசனம்) நிகழ்ச்சி போல 'கல்வி தரிசனம்' என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பப்படலாம்.

10. (a) ஆசிரியர்களை உருவாக்குவதற்கானத் திட்டங்கள் போதுமான அளவில் இல்லை என்பதால் பள்ளிகளில் கற்றல் தரம் திருப்திகரமானதாக இல்லை. கல்வி இளங்கலை (பி.எட்.,) படிப்புக்கானத் திட்டத்தில் நடுநிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி, மழலையர் பள்ளி வகுப்புகளை நடத்துவதற்கான சிறப்புப் பயிற்சிகள் இணைக்கப்பட வேண்டும். இத்திட்டத்திற்கானக் கால அளவு, பட்டம் பெற்ற பிறகு ஓராண்டு, மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த அளவில் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் என இருக்க வேண்டும். பள்ளிக் கல்வி மாறி வரும் தேவைகளுக்கு ஏற்றதாக அமைந்திடும் வகையிலும், பெரிதும் நடைமுறைக்கு ஏற்றவாறு அதனை மாற்றிடும் வகையிலும் இத்திட்டத்தின் உள்ளடக்கம் கட்டமைக்கப்பட வேண்டும். பயிற்சி பெறுவோர் சுயமாகக் கற்கும் திறனைப் பெறும் வகையிலும், சுயேச்சையாக சிந்திக்கத் தூண்டும் வகையிலும் இத்திட்டங்களுக்கான முக்கியத்துவம் அமைய வேண்டும். ஒரு தொழிற்கல்வியாகிய, பணிக்கு முந்தைய ஆசிரியர் பயிற்சித் திட்டம் கறாரானதாக, முழுமையானதாக, தீவிர முனைப்புத் திட்டமாக இருக்க வேண்டும். ஆகவே, பி.எட்., படிப்புக்கான அஞ்சல் வழிக் கல்விக்கு அங்கீகாரம் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும்.

(b) ஆசிரியர்களுக்கான தொடர் கல்வி நிறுவனமயமாக்கப்பட வேண்டும். ஆசிரியர்களின் தொழில்சார் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட, பணிக்கு உட்பட்ட கல்வித் திட்டங்களும், இதர செயல்பாடுகளும் முறைப்படி வடிவமைக்கப்பட்டு, கற்பனைத் திறனோடு செயல்படுத்தப்பட வேண்டும்.

12. (a) அனைத்துப் பள்ளி வகுப்புகளுக்குமான பாடத் திட்டங்களையும், பாடப் புத்தகங்களையும் ஆய்வு செய்வதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும்

பல துணைக் குழுக்களுடன் கூடி ஒரு திட்டக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும். பின்வரும் பணிகள் குறித்து முடிவு செய்யும் பொறுப்பு துணைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்:

i. கற்பிக்கப்பட வேண்டிய தலைப்புகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

ii. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொண்டு வரப்பட வேண்டிய கருத்தாக்கங்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை

iii. ஓராண்டு காலத்தில் இந்தக் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான கருத்தாக்கங்களைக் கற்பிப்பதற்கு, நடைமுறையில் கிடைக்கக்கூடிய மொத்த வேலை நாட்களில், ஒரு ஆசிரியருக்கு இணக்கமான முறையில் தேவைப்படுகிற மொத்த கால அளவு.

(b) அடிப்படைக் கணிதம், கருத்தாக்கங்கள் ஆகியவற்றைக் குழந்தைகள் கற்றுக் கொள்வதற்கான வேகத்தைக் குறைக்கும் நோக்கத்துடனும், எண்ணிக்கை மட்டுமல்லாமல் இதர அடிப்படைக் கணிதத்திற்கான வாய்ப்பை (உதாரணமாக, வெளி மற்றும் வடிவம் தொடர்பான கருத்தாக்கங்கள், கணிதச் சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் போன்றவை) விரிவுபடுத்தும் நோக்கத்துடனும், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், தொடக்கப் பள்ளி வகுப்புகளுக்கான கணிதப் பாடத்திட்டம் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

(c) மொழிப் பாடநூல்கள் போதுமான அளவுக்குப் பேச்சு வழக்கு சொற்றொடர்களைப் பிரதிபலிக்க வேண்டும். குழந்தைகளின் வாழ்க்கை அனுபவங்கள், கற்பனையான கதைகள், பாடல்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சாதாரண மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கிற கதைகள் ஆகியவை எதிர்காலப் பாடப்புத்தகங்களில் போதிய அளவுக்கு இடம்பெற வேண்டும். கல்வி மொழி, அளவுக்கு மீறி நீதிபோதனை அடிப்படையிலான மொழி இரண்டும் தவிர்க்கப்பட வேண்டும்.

(d) தொடக்கப்பள்ளி வகுப்புகளில் அறிவியல் பாடத்திட்டமும், பாட நூல்களும் தற்போது இருப்பதைவிட மிகப்பெரிய அளவிற்கு சோதித்து அறியும் முறைக்கு வாய்ப்பளிப்பதாகவும், கட்டாயமானதாகவும் இருக்க வேண்டும். சுகாதாரம், உடல்நலம் போன்ற துறைகளில் நீதிபோதனை அடிப்படையில் அல்லாமல், உண்மை வாழ்க்கை நிலைமைகளை ஆய்வுப்பூர்வமாக பிரதிபலிக்கும் வகையில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். தொடக்க நிலை வகுப்புகளின் அறிவியல் பாடங்களில் சேர்க்கப்பட்டுள்ள ஏராளமான சிறு சிறு விவரங்கள் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும்.

(e) நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் அனைத்து வகுப்புகளுக்குமான இயற்கை அறிவியல் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப் பட வேண்டும். பெரும்பாலான பாடங்கள் குழந்தைகளாலும், ஆசிரியர்களாலும் செய்து பார்க்கத்தக்க வகையில், பரிசோதனைகளுடனும், செயல்பாடுகளுடனும் இணைந்ததாக அந்தப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்ட வேண்டும்.

(f) 6 முதல் 8 வரையிலான வகுப்புகளிலும், 9, 10ம் வகுப்புகளிலும் சமூக அறிவியல் பாடத் திட்டமானது, வரலாறு, புவியியல் சார்ந்த தகவல்களை வழங்குவதோடு நமது சமூக அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பின் தத்துவம், செயல்முறை ஆகியவற்றைப் பற்றித் தெரிவிப்பதாகவும் இருக்க வேண்டும். சமூகப் பொருளாதார வளர்ச்சியின் பிரச்சனைகள், முன்னுரிமைகள் ஆகியவற்றை மாணவர்கள் மதிப்பீடு செய்து, புரிந்துகொண்டு, சிந்திப்பதற்கு அது தூண்டுவதாக இருக்க வேண்டும். வரலாற்றுப் பாடங்களில் திரும்பத் திரும்பக் கூறுகிற தன்மை மாற்றப்பட வேண்டும். 9, 10ம் வகுப்புகளில் தொன்மைக் கால வரலாறு பற்றிய பாடங்கள் கொண்டு வரப்பட வேண்டும். 6 முதல் 8ம் வகுப்பு வரையிலான பாடங்களில் விடுதலைப் போராட்ட வரலாறு, விடுதலைக்குப் பிந்தைய வளர்ச்சிப் போக்குகள் சேர்க்கப்பட வேண்டும். தற்போது கற்பிக்கப்படும் குடிமையியல் பாடங்கள், குழந்தைகள் நினைவில் வைத்துக் கொள்வதற்கு மிகுந்த சிரமத்தைக் கொடுப்பதாக இருக்கின்றன. ஆகவே, குடிமையியல் பாடத்தின் தற்போதைய வடிவம் கைவிடப்பட்டு, சமகால பாடங்கள் சேர்க்கப்பட வேண்டும். புவியியல் பாடங்கள் சமகால நிலைமைகளோடு தொடர்புள்ளதாக இருக்க வேண்டும்.

...பக்கம் 18ன் தொடர்ச்சி

பற்றிய நம்பகத்தன்மை பற்றிய கேள்விகளையும் இது எழுப்புகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்கு இணையாக, குணநலன்களின் அடிப்படையில் (மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசம் வாரியாக) 2013ன் போது கைது செய்யப்பட்ட (இந்திய தண்டனைச்சட்டம் மற்றும் SLL சட்டத்தின் கீழ்) சிறார்கள் என்ற தலைப்புள்ள அட்டவணை 10.14ல் அளிக்கப்பட்டுள்ள தகவலைப் பொறுத்தமட்டில், அவையும் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட சிறாரின் சமூக பொருளாதார நிலைதான் இந்த அட்டவணையில் குணநலன்களின் அடிப்படையில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காவல்துறை, சிறார்களின் சமூக பொருளாதார நிலை பற்றிய இத்தகைய ஆவணத்தை பராமரிப்பதில்லை என்பது TISS அமைப்பை சேர்ந்தவர்கள் தகவல் சேகரிக்கும்போது கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வாளர்கள் இந்த தகவலை சம்மந்தப்பட்ட குழந்தைகளின் வழக்கு கோப்புகளில் கூட கண்டறிய மிகவும் சிரமப்பட்டனர். இத்தகைய கண்ணோட்டத்தில், தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் தனது தகவலில் குழந்தைகளின் சமூக நிலை பற்றிய விவரத்தை அளிக்க முடியும் என்றால் 2013 ல் கைது செய்யப்பட்ட அனைத்து சிறாருக்கும் அத்தகைய விவரத்தை அளிக்க முடியும். ஆனால் அது களத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் செயல்–பாட்டாளார்களுக்கு திருப்திகரமாக இல்லை.

சட்டத்தோடு முரண்பட்ட சிறார் தொடர்புடைய பழைய வழக்குகளிலும் புதிய வழக்குகளிலும் சிறாரின் குற்றங்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடும் தன்மை பற்றிய எண்ணிக்கைகளை அளிப்பதாக அட்டவணை 10.14 சொல்லிக்கொள்கிறது. இந்த எண்ணிக்கைகள் எவ்வாறு சிறார் குற்றங்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடும் தன்மையை குறிக்கின்றன என்பதைப் பற்றியும் அத்தகைய தன்மை எந்த வழிமுறையில் கணக்கிடப் பட்டது என்பது பற்றியும் தெளிவாக இல்லை. ஒருவர், தான் முன்னர் செய்த குற்றத்துக்காக தண்டனை பெற்ற பின்னரும் அல்லது ஏதாவது ஒரு வகையிலான தலையீட்டுக்கு உள்ளான பிறகும் மீண்டும் குற்றம் செய்யும் பழக்கத்துக்கு செல்வதை குற்றங்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடும் தன்மை என்பது குறிக்கிறது. ஒருவர் மீண்டும் கைது செய்யப்படுவது அல்லது மீண்டும் தண்டனை பெறுவதற்குக் காரணமான குற்றச் செயல்களால் குற்றங்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடும் தன்மை அளவிடப்படுகிறது.

இறுதியாக, சுருக்க அறிக்கையில் அத்தியாயம் 10ல் சட்டத்தோடு முரண்படும் சிறார் பற்றிய தகவல் அளிக்கப் பட்டிருக்கும் விதம் குறித்து இந்த கட்டுரையாளருக்கு கடுமையான மாறுபட்ட கருத்துகள் உள்ளன. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 14 அட்டவணைகளும் 8 கருத்துகளாக சுருக்கித் தொகுக்கப்பட்டுள்ளன. பொதுவாக இத்தகைய இயல்பான தொகுப்பிலிருந்து எதிர்பார்ப்பது ஒவ்வொரு அட்டவணையின் சுருக்கமாகும். ஒரு சில அட்டவணைகள் பற்றி இந்த இயல்பான தொகுப்பில் ஏன் குறிப்பிடப்படவில்லை என்பதற்கு எந்த ஒரு காரணமோ அல்லது நியாயமோ இல்லை. இது, அறிக்கை சொல்லப்பட்ட நடைமுறையில் பாரபட்சம் இருக்கிறது என்ற தோற்றத்தை தருகிறது.

(ஆ) 2012 ஐ விட 2013ல் சட்டத்தோடு முரண்படுகிற சிறார் எண்ணிக்கை, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 13.6 சதவீதமும் உள்ளூர் அளவிலான சிறப்புச் சட்டங்களின் கீழ் 2.5 சதவீதமும் அதிகரித்துள்ளது என்று இந்த அறிக்கையின் ஒரு பகுதி குறிப்பிடுகிறது. இது மிகவும் தவறான புரிதலுக்கு இட்டுச் செல்கிறது, குற்றத்தில் ஈடுபடும் சிறாரின் சதவீதம் அதிகரித்துள்ளது என்ற தோற்றத்தையும் இது தருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியம், இவ்வாறு இருந்திருக்க வேண்டும்: 2012ஐ விட 2013ல் சட்டத்தோடு முரண்படுகிற சிறார் என்று குற்றம் சாட்டப்பட்ட சிறார் எண்ணிக்கை, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 13.6 சதவீதமும் உள்ளூர் அளவிலான சிறப்புச் சட்டத்தின் கீழ் 2.5 சதவீதமும் அதிகரித்துள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் இது முதல் தகவல் அறிக்கைகளிலிருந்து பெறப்பபட்ட தகவலாகும்.

(இ) பொதுவான விதி என்னவென்றால், எல்லா தகவல்களிலும் ஒன்று எண்ணிக்கைகள் பயன்படுத்தப் பட வேண்டும் அல்லது சதவீதம் பயன்படுத்த வேண்டும் என்பதுதான். ஆனால் இந்த அறிக்கையில் சட்டத்தோடு முரண்படுகிற சிறார்கள் பற்றிய சுருக்க வடிவத்தை அல்லது பகுதியை படிக்கும்போது எண்ணிக்கைகள் வாசகர்களின் கவனத்தை கவரும் வகையில் அழுத்தமாக இல்லையென்றால், அந்த இடத்தில் சதவீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, சதவீதங்கள் கவரும்படியாக இல்லையென்றால், எண்ணிக்கைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

உதாரணத்துக்கு, 'கைது செய்யப்பட்ட சிறாரில்' அதிகமானவர்கள் திருட்டுக்காகவும் (7,969),

காயமேற்படுத்துதல் (6,043), கொள்ளை (3,784) என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்படுள்ளது. இந்த தலைப்புகளில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ள மொத்த சிறார் 40.9 சதவீதம் ஆகும். இந்த தகவலில் எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

'சிறாரால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் சம்பவங்களின் அதிகபட்ச உயர்வு பெண்ணை மானபங்கப்படுத்துதல் (132.3 சதவீதம்) பெண்களை இழிவுபடுத்துதல் (70.5 சதவீதம்) மற்றும் பாலியல் வன்புணர்வு (60.3 சதவீதம்) ஆகிய செயல்களில் ஆகும்' என்று அந்த அறிக்கையின் பகுதி குறிப்பிடுகிறது. இந்த இடத்தில், சதவீதம் குறிப்பிடப்பட்டுள்ளது, எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட வில்லை. இது பாரபட்சத்தைச் காட்டுகிறது. இது ஒரு நல்ல வழிமுறை அல்ல. இது பற்றி கீழ் வரும் அட்டவணையில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## தவறான பாதைக்கு இட்டுச்செல்லும் விளக்கம்

அட்டவணை 10.3 ன் ஒரு பகுதி கீழே கொடுக்கப் பட்டுள்ளது. இதிலிருந்து வெறும் சதவீதத்தை மட்டும் குறிப்பிட்டு எண்ணிக்கைகளை குறிப்பிடவில்லை என்றால் அது எப்படி தவறான புரிதலுக்கு நம்மை இட்டுச் செல்கிறது என்பதை விளக்குகிறது.

## அட்டவணை: இந்தியாவில் குற்றங்கள் பற்றிய புள்ளிவிவரம் 2013

| குற்றத் தலைப்பு | ஏறக்குறைய (2008 முதல் 2012வரை) | 2013 | 2013ல் மாறிய சதவீதம் |
|---|---|---|---|
| ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடம் தாக்குதல் (பிரிவு 354 இந்திய தண்டனைச் சட்டம்) | 553 | 1,424 | 132.3 |
| ஒரு பெண்ணை மானபங்கம் படுத்தும் நோக்கத்துடம் இழிவு செய்வது ( பிரிவு 509) | 162 | 312 | 20.5 |
| பாலியல் வன்புணர்வு (பிரிவு 376) | 951 | 1,884 | 60.3 |
| வெளிநாட்டவர்களுக்கான சட்டம் | 25 | 62 | 148.0 |
| இந்திய பாஸ்போர்ட் சட்டம் | 8 | 17 | 112.5 |

ஏறக்குறைய 553 இளம் சிறார்கள், " ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடன் தாக்குதல் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள் (இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 354)". 2013 ல், 1,424 சிறார் இதே குற்றத்துக்காக காவல்துறையால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இந்த உயர்வு, 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள 871 வழக்குகளுக்கு ஏற்ப உயர்த்தப்பட்டதாகும். 871 வழக்குகள் அதிகரித்துள்ளன என்பது ஒரு செய்தி நிறுவனத்துக்கான பரபரப்பான தலைப்புச் செய்தியாக இல்லாமல் போகலாம். எனினும், இதை சதவீதமாக மாற்றினால் அது 132 சதவீதமாகும், அது பிறரின் கவனத்தைக் கவரும். அதே போல், 'அகதிகள்' பிரச்சனையை ஒரு அரசாங்கம் கவனிக்க விரும்பினால், இந்திய மண்ணில் அடியெடுத்து வைத்துள்ள இளம் சிறார்களில் 148 சதவீதம் அதிகரித்துள்ளது என்று கூறுகிறது. ஆனால் இந்த எண்ணிக்கை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழுவதும் ஒரு வருடத்துக்கு வெறும் 62 மட்டுமேயாகும். அவற்றுள் பலர் சூழ்நிலைக் கைதிகளாக இருப்பார்கள்.

## முடிவுகள்

அதிகாரப்பூர்வ தகவல்கள் எல்லைகளை, ஒரு செய்தி அறிக்கையிலோ அல்லது அறிக்கைகளிலோ குறிப்பிடப்படும்போது அதன் எல்லைகளைத் தனிநபரானாலும், அமைப்பானாலும் புரிந்து கொள்ள வேண்டும். நம்பகத்தன்மையான தகவலை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். எனினும், கிடைத்த தகவலை முறையாக விளக்க சமூக விஞ்ஞானிகளையும் குற்றவியல் நிபுணர்களையும் துறை சார்ந்த வல்லுநர்களையும் ஈடுபடுத்துவது முக்கியம். கணிதம் மற்றும் புள்ளியியலுக்கும் உள்ள வித்தியாசம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

குற்றம் பற்றிய புள்ளிவிவரம் பொது கொள்கையை பாதிக்கும் அதே நேரத்தில், என்ன தகவல் சேகரிக்கப்படவேண்டும் என்பதை சமூக மற்றும் அரசியல் முன்னுரிமைகள் முடிவு செய்யக்கூடாது. சமூக மற்றும் சட்ட கண்ணோட்டத்தில் அடிப்படை நெறிகள் பின்பற்றப்படவேண்டும். தவறான பிரயோகங்கள் நம்மை தவறான கருத்துக்கு இட்டுச் செல்லும். 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் சிறாருக்கும் ஒரே மாதிரியான அளவீடுகளைப் பயன்படுத்தக்கூடாது. தேவைப்பட்டால் எண்ணிக்கையை, தேவைப்பட்டால் சதவீதத்தை எனப் பயன்படுத்துவது நம்மை நிச்சயம் தவறான பாதைக்கே இட்டுச் செல்லும். தேசிய குற்றப் பதிவுகள் நிறுவனம் அட்டவணை 10ல் உள்ள தகவலைக் குறிப்பிடப் பயன்படுத்தியுள்ள தனது ஆய்வு முறையையும் கட்டமைப்பையும் மறு பரிசீலனை செய்ய தீவீரமாக முயற்சிக்க வேண்டும்.

**ஆதாரம்: எகனாமிக் & பொலிடிகல் வீக்லி, ஜூன் 20, 2015**

# வரைமுறையற்ற வாடகைத்தாய் தொழில்

## அபாய நிலையில் பெண்கள்

-ரீதிகா முகர்ஜி,
டி.வி. சேகர்

*அண்மைக்காலமாக இந்தியா வர்த்தகரீதியான வாடகைத்தாய் தொழிலின் புகலிடமாக மாறியுள்ளது. சர்ச்சைக்குரிய துணை மறுஉற்பத்தி தொழில்நுட்பம் (Assisted Reproductive Technology – ART) இந்த வர்த்தகத்திற்குப் பயன்படுகிறது. கடுமையான வறுமை நிலவுவதால் தங்களது கருப்பைகளை வாடகைக்கு விட தயாராக உள்ள பெண்கள் எப்போதுமே இருக்கிறார்கள். ஆனால், சரியான சட்டங்களோ, விதிமுறைகளோ இல்லாத நிலையில் இந்த தொழிலில் வெளிப்படைத்தன்மை என்பது இல்லை. இதனால், வாடகைத் தாய்கள் அப்பட்டமான சுரண்டலுக்கு உள்ளாகிறார்கள். இதை சரிப்படுத்தும் நோக்கத்துடன்தான் துணை மறுஉற்பத்தி தொழில்நுட்ப சட்ட முன்வரைவு-2013 கொண்டு வரப்பட்டது. கொல்கத்தாவில் நடத்தப்பட்ட இந்த கட்டுரைக்கான ஆய்வு, இதற்கான சட்டம் எந்தெந்த அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. சமூகப் பழி, உடல்நலக் கேடுகள், அச்சம், மன அழுத்தம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் தங்களது கருப்பைகளை வாடகைக்கு விடும் ஏழைப் பெண்கள் எப்படி எளிதாக சுரண்டப்படுகிறார்கள்*

வர்த்தகரீதியான வாடகைத்தாய் ஏற்பாட்டை முறைப்படுத்துவதற்கான ஒரு தொடர்ச்சியான முயற்சியாக, சம்பந்தப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் முயற்சியாகவும், துணை மறு உற்பத்தி தொழில்நுட்பம் (முறைப்படுத்துதல்) (ART) சட்ட முன்வரைவில், 2013ஆம் ஆண்டில் சில திருத்தங்கள் சேர்க்கப்பட்டன. 2008, 2010ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட முன்வரைவுகள் திருத்தியமைக்கப்பட்ட பிறகு இது மூன்றாவது சட்ட முன்வரைவாகும்.

ஏழைப் பெண்கள் சுரண்டப்படுவதை குறைப்பதற்காக இத்தொழிலை முறைப்படுத்துவதற்கும், சட்டப்பூர்வமாக மாற்றுவதற்கும் நடக்கிற முயற்சிகள் பற்றி ஊடகங்கள் பேசுகின்றன. 2013ஆம் ஆண்டின் ART சட்ட முன்வரைவை ஆய்வு செய்வதற்காக நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில், மத்திய உள்துறை அமைச்சகம் இந்தத் தொழில்நுட்பத்தை “திருமணமான, குழந்தைப்பேறு இல்லாத இந்திய தம்பதிகளுக்கு” மட்டுமே அனுமதிப்பது என்ற ஆலோசனையை முன்வைத்தது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI), இந்திய வம்சாவளியினர் (PIO), கடல் கடந்த இந்திய குடிமக்கள் (OCI) ஆகியோரும் இந்தியாவில் வாடகைத்தாய் ஏற்பாட்டைச் செய்துகொள்ள அனுமதிக்கப்படலாம் என்ற கருத்தையும் அமைச்சகம் முன்வைத்தது. இந்தியக் குடிமக்களை திருமணம் செய்துகொண்ட வெளிநாட்டவர்கள் தவிர்த்து மற்ற வெளிநாட்டவர்களுக்கு இதனை விரிவுபடுத்த அமைச்சகம் விரும்பவில்லை. பண ஆசை காட்டி, இந்தியாவின் ஏழைப்பெண்கள் வாடகைத்தாய்களாக மாற்றப்படும் அபாயத்தைத் தடுப்பதற்காகவே இந்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதாக ஒரு பத்திரிகைச் செய்தியில் கூறப்பட்டிருந்தது. (தற்போது அந்த சட்டமுன்வரைவு மத்திய அமைச்சரவையின் குறிப்புகளுக்கான ஆவணங்களில் ஒன்றாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தற்போதைக்கு அது பொதுமக்கள் பார்வைக்குக் கிடைக்காது).

பல்வேறு மாநிலங்களிலும் தேசிய அளவிலும் இது தொடர்பான பல்வேறு வழிகாட்டல்கள், விதிமுறைகள் கடந்த ஆண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒரு அம்சமாக மத்திய அமைச்சகம், இந்த நோக்கத்துடன் இந்தியாவுக்கு வரவிரும்பும் வெளிநாட்டினர் சுற்றுலாவுக்கான விசா அல்லாமல், மருத்துவ விசா பெற்று வரவேண்டும் என்ற ஒரு புதிய சட்ட வழிகாட்டலை வெளியிட்டது. அவர்கள் தங்களது நாட்டின் தூதரகத்திலிருந்தோ, வெளியுறவு அமைச்சகத்திலிருந்தோ அவர்களது நாட்டில் வாடகைத்தாய் தொழில்நுட்பம் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த முறையில் இங்கு பிறக்கும் குழந்தைகள் வாடகைத்தாய்க்கு ஏற்பாடு செய்யும் தம்பதிகளின் ரத்த உறவுக் குழந்தைகளாகவே அந்த நாடுகளில்

ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் கடிதம் வாங்கி வர வேண்டும் என அமைச்சகம் கூறியது. வாடகைத்தாய் முறையில் பிறக்கும் குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பை தாங்கள் ஏற்றுக்கொள்வதாக எழுதிக்கொடுக்க வேண்டும், வாடகைத்தாய் மருத்துவத் தொழில்நுட்ப நடைமுறைகள் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தால் (ICMR) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வழிகாட்டல்களையும் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. குழந்தையுடன் இந்தியாவில் இருந்து தங்களது நாடுகளுக்குத் திரும்புவதற்கு முன்பாக வெளிநாட்டினர் பதிவு அலுவலகத்தில் இருந்து (FRO), வெளியேறுவதற்கான அனுமதியைப் பெற வேண்டும், குழந்தை/குழந்தைகள் யாரிடம் இருப்பது என்பது தொடர்பான சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் சான்றிதழ்களை சரிபார்த்த பிறகு அந்த அனுமதி வழங்கப்படும் என்றும் அமைச்சகம் கூறியது. வாடகைத்தாயாக முன்வரும் பெண்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில் ஏற்றுக்கொண்டுள்ள உறுதிமொழிகளை இந்தத் தம்பதிகள் நிறைவேற்ற வேண்டும், வெளிநாட்டினர் பதிவு அலுவலகங்கள் இந்தக் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்களையும், வெளிநாட்டுப் பெற்றோர்களின் விசா, பாஸ்போர்ட் ஆகியவற்றின் புகைப்பட நகல்களை வைத்திருக்க வேண்டும் என்ற வழிகாட்டல்களையும் அமைச்சகம் கூறியுள்ளது.

இப்போது நம் முன் உள்ள கேள்வி என்னவென்றால் இத்தகைய வழிகாட்டல்களால் வாடகைத்தாய்கள் சுரண்டப்படுவதைக் கட்டுப்படுத்துமா என்பதுதான்.

தற்போதைய வாடகைத்தாய் ஏற்பாடுகள் இந்தியாவின் ஏழைப் பெண்களிடையே எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை கண்டறிவதற்காக கொல்கத்தா நகரில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தரப்படுத்துதல் என்ற ஆய்வுமுறை அடிப்படையில், ஒன்பது பெண்களிடமும், அவர்களை வாடகைத் தாய்களாக நியமித்த ஒன்பது தம்பதிகளிடமும், முகவர்கள்/தரகர்களிடமும், வாடகைத்தாய்களாக குழந்தைகளைப் பெற்றுக்கொடுத்த பெண்களின் கணவர்களிடமும் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. பணத்திற்காக வாடகைத்தாய்களாக செயல்பட முன்வரும் பெண்கள் எந்த அளவிற்கு எளிதாக சுரண்டப்படுகிறார்கள் என்பதை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதே இந்த ஆய்வின் நோக்கம். பின்வரும் பட்டியல்கள் இதனை எடுத்துக்காட்டுகின்றன:

| வாடகைத்தாயாக செயல்பட்ட பெண் | வயது | மணவாழ்வு நிலை | தொழில் | கல்வி | குழந்தைகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 27 | மணமானவர் | பிச்சை | படிக்காதவர் | 2 |
| 2 | 28 | மணமானவர் | குடும்பத்தலைவி | படிக்காதவர் | 2 |
| 3 | 25 | மணமுறிவு | குடும்பத்தலைவி | 4ஆம் வகுப்பு | 1 |
| 4 | 35 | மணமுறிவு | குடும்பத்தலைவி | 6ஆம் வகுப்பு | 1 |
| 5 | 28 | மணமானவர் | மகப்பேறு மருத்துவமனைக்கான முகவர் | 5ஆம் வகுப்பு | 2 |
| 6 | 25 | மணமானவர் | குடும்பத்தலைவி | படிக்காதவர் | 3 |
| 7 | 22 | மணமானவர் | குடும்பத்தலைவி | படிக்காதவர் | 2 |
| 8 | 25 | மணமானவர் | வீட்டுப் பணியாளர் | 5ஆம் வகுப்பு | 2 |
| 9 | 26 | மணமுறிவு | குடும்பத்தலைவி | படிக்காதவர் | 2 |

**பட்டியல் 1: விசாரிக்கப்பட்ட வாடகைத்தாய் பெண்கள் பற்றிய விவரங்கள்**

**பட்டியல் 2: வாடகைத்தாய்களின் கணவர்கள் விவரம்**

| கணவர்கள் | வயது | தொழில் | கல்வி |
|---|---|---|---|
| 1 | 29 | வேலையில்லாதவர் | படிக்காதவர் |
| 2 | 40 | ரிக்ஷா தொழிலாளி | படிக்காதவர் |
| 3 | 29 | வேலையில்லாதவர் | படிக்காதவர் |
| 4 | 50 | தொழிற்சாலை தொழிலாளி | படிக்காதவர் |
| 5 | 36 | வேலையில்லாதவர் | படிக்காதவர் |
| 6 | 31 | விவசாயத் தொழிலாளி | படிக்காதவர் |
|  | 25 | விவசாயத் தொழிலாளி | படிக்காதவர் |
|  | 30 | வேலையில்லாதவர் | படிக்காதவர் |
|  | 31 | வேலையில்லாதவர் | படிக்காதவர் |

வாடகைத்தாய்களாக முன்வந்த பெண்களும் அவர்களது கணவர்களும் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் என்பதை இந்தப் பட்டியல்கள் காட்டுகின்றன. இவர்கள் அனைவருமே தங்களது கடுமையான வறுமை நிலைமையைப் பற்றியும், பணநெருக்கடியில் இருப்பது

பற்றியும், கருப்பைகளை வாடகைக்கு விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பது பற்றியும் கூறினர். தங்களது பெண்களின் திருமணச் செலவு, ஒரு வீடு கட்டும் செலவு, கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய தேவை, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டிய தேவை, தங்களது குடும்பங்களுக்குப் பொருளாதாரரீதியாக உதவ வேண்டிய நிலை ஆகிய காரணங்களுக்காக பணம் தேவைப்படுகிறது என்று கூறினார்கள். சராசரியாக 2 லட்சம் ரூபாய்க்கு (குறைந்தபட்ச தொகை ரூ.1.5 லட்சம், அதிகபட்சத் தொகை ரூ.2 லட்சம்) கருப்பைகளை வாடகைக்கு விட சம்மதித்துள்ளனர். மகப்பேறு மருத்துவமனைகள், ஏற்கெனவே வாடகைத்தாய்களாக செயல்பட்ட பெண்கள், மருத்துவர்கள், இதர பல விஷயங்கள் இது தொடர்பான தகவல்கள் இவர்களுக்குப் பெருமளவுக்கு முகவர்களிடமிருந்துதான் தெரியவந்தது.

இந்தப் பெண்களில் யாருக்கும் அவர்களது கணவர்களிடமிருந்து பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை. தங்களது முடிவுக்கு கணவர்கள், தொடக்கத்தில் கொஞ்சம் தயக்கம் காட்டினாலும் பின்னர், ஆதரவாக இருந்ததாகவே இந்தப் பெண்கள் தெரிவித்தனர். மணமுறிவு பெற்ற அல்லது பிரிந்து வாழ்கிற பெண்களைப் பொறுத்தவரையில் இந்த முடிவை எடுப்பதில் அவர்களது குடும்பத்தினர் குறிப்பாக அவர்களது அன்னையர் வலுவான தாக்கம் செலுத்தியுள்ளனர்.

வாடகைத்தாய்களின் மூலமாகத் தங்களது குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முன்வந்த தம்பதிகளைப் பொறுத்தவரையில், அதிக வயதுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஒரு பெண்ணின் வயது 52, அவரது கணவரின் வயது 57. இன்னொரு பெண்ணின் வயது 45, கணவரின் வயது 50. இந்த இரண்டு தம்பதிகளுமே திருமணமாகி 20 ஆண்டுகளாக, தாங்களாக குழந்தை பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருந்திருக்கிறார்கள்.

உறுதியற்ற சட்ட நடைமுறைகள், சரியான வாடகைத்தாயைப் பெறுவதில் உள்ள சிரமம் போன்ற காரணங்களால் தொடக்கத்தில் தயங்கினாலும் கூட, மருத்துவர்களுடன் விரிவாக கலந்தாலோசித்ததன் அடிப்படையிலும், பத்திரிகைகளின் மூலம் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும் இதற்கு ஒப்புக்கொண்டனர். தங்களது குடும்பத்தினருக்கே கூட தெரிவிக்காமல்தான் இதை மேற்கொண்டுள்ளனர்.

**கண்டறிந்தவை**

வாடகைத்தாய்களுக்கு எப்படியாவது வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலைமை, இதனால் ஏற்படக்கூடிய சமூகப் பழிகளையோ, மற்றவர்களது விமர்சனங்களையோ இரண்டாம்பட்சமாக்கிவிட்டன. இருந்தபோதிலும், இந்த மனஉறுதிக்கு ஊடாக ஒரு அச்சத்துடனும், என்ன ஆகுமோ என்ற கவலையுடனும்தான் இதில் ஈடுபட்டனர்.

**கர்ப்பத்திற்கு முன்பும், கர்ப்ப காலத்திலும் வாடகைத்தாய் பெண்களின் உடல்நலப் பிரச்சனைகள் ஒருபுறமிருக்க, பிரசவத்திற்குப் பிறகு பல்வேறு சிறிய, பெரிய பிரச்சனைகள் உள்ளன.**

“ராஞ்சி நகரத்திற்கு (கருமுட்டை மாற்று சிகிச்சைக்காக) போவதை நினைத்தால் எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது. நான் படிக்காதவள். கொல்கத்தாவை விட்டு வேறு ஊருக்குப் போனதே இல்லை. ஸ்டேஷனில் இறங்காமல் விட்டுவிட்டால் என்ன ஆவது, அங்கே எதாவது நடந்தால் என்ன செய்வது? அங்கே யாராவது என்னை கடத்தி விற்கக் கூட செய்யலாம். அப்போது என்ன செய்வது? என் கணவரை என்னோடு அழைத்து வரவேண்டாம் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். கருமுட்டையை என் வயிற்றில் வைத்த பிறகு கணவருடன் பாலியல் நெருக்கம் எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக அப்படி சொல்கிறார்கள். ஆனால், அவர் இல்லாமல் என்னால் எதுவும் செய்ய முடியாது. எனக்கு ஆதரவாக இருப்பவர் அவர்தான்,” என்று பிச்சை எடுப்பதில் ஈடுபட்டவரான வாடகைத் தாய் கூறினார்.

“கர்ப்பமாக இருக்கிற காலத்தில் நான் குடும்பத்தை விட்டும் குழந்தைகளை விட்டும் பிரிந்திருக்க வேண்டுமோ என்ற பயம் எனக்கு இருக்கிறது. அவர்களை யார் பார்த்துக்கொள்வார்கள். வாடகைத் தாயாக இருப்பதற்கு சம்மதித்தபோது எனக்கு இவையெல்லாம் தெரியாது,” என்கிறார் மற்றொரு பெண்.

குழந்தைப் பிறந்த உடனேயே அவர்கள் குழந்தையை எடுத்துப் போய்விடுவார்கள். அதற்குப் பிறகு எனக்கு சுரக்கும் தாய்ப்பாலை என்ன செய்வது? பால் சுரப்பதைத் தடுக்க வழி இல்லையா,” என்று இன்னொரு வாடகைத்தாய் கேட்டார்.

தங்களுடைய வயிற்றில் வளர்ந்த சிசுவைப் பொறுத்தவரையில் இந்தப் பெண்கள் அனைவரும் பெரும்

மனஉறுதியோடு, குழந்தையைவிட பணம் முக்கியம் என்ற தீர்மானத்தோடு இருந்திருக்கிறார்கள். ஒரே ஒரு பெண் மட்டுமே தன் வயிற்றில் வளர்ந்த குழந்தையை இனி பார்க்கவே முடியாது என்பது குறித்து கவலையை வெளிப்படுத்தினார்.

''குழந்தை என் வயிற்றில்தான் மாதக் கணக்கில் வளரப் போகிறது. குழந்தை வளர்வதற்கு நான்தான் உதவி செய்யப் போகிறேன். ஆனால், குழந்தை பிறந்த பிறகு ஒரு தடவை கூட பார்ப்பதற்கு என்னை அனுமதிக்க மாட்டார்கள். குழந்தையின் முகத்தைக் கூட பார்க்காமல் எப்படி என்னால் இருக்க முடியும்?'' இவ்வாறு அந்த பிச்சை எடுக்கும் பெண் கேட்டார்.

தங்களை வாடகைத்தாய்களாக பயன்படுத்திய தம்பதிகள் தங்களை நல்லபடியாக கவனித்துக்கொண்டார்கள் என்றும், அவர்களது குழந்தைக்கு வாடகைத்தாயாக செயல்பட்டதில் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தனர்.

**பணத்திற்காக வாடகைத்தாய்களாக செயல்பட முன்வரும் பெண்கள் எந்த அளவிற்கு எளிதாக சுரண்டப்படுகிறார்கள் என்பதை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதே இந்த ஆய்வின் நோக்கம்.**

''அவர்கள் மிகவும் நல்லவர்களாக இருக்கிறார்கள். என் உடல் நலம் எப்படி இருக்கிறது என்று தொடர்ந்து விசாரிக்கிறார்கள். நான் என்ன சாப்பிடுகிறேன். என் குழந்தைகள் என்ன விரும்புகிறார்கள் என்பதில் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். ஒவ்வொரு முறையும் என்னைப் பார்க்க வருகிறபோது அன்பளிப்புகள் கொண்டு வருகிறார்கள். எங்களை ஓட்டல்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள். அந்த அக்காள் என்னை கூடப் பிறந்த தங்கையாகவே நடத்துகிறார்.

நான் பணத்திற்காகத்தான் இதைச் செய்கிறேன் என்றாலும் அந்த தம்பதிக்கு கண்டிப்பாக எதாவது நல்லது செய்ய வேண்டும். அவர்களால் இப்படி வாடகைக்கு அமர்த்தப்பட்டதில் எனக்கு மகிழ்ச்சிதான். இதற்கு முன்னால் இதே போல் ஒரு தம்பதி என்னைப் பார்க்க வந்தார்கள், அதிகமாக பணம் தருவதாகவும் சொன்னார்கள். ஆனாலும் அவர்களை எனக்குப் பிடிக்கவில்லை. எனது கருப்பையை வாடகைக்கு விடுகிறேன் என்பது உண்மைதான். ஆனால், அவர்களுக்கு நான் ஒரு குழந்தையைக் கொடுக்கிறேன்,'' என்று இந்தத் தொழிலில் ஒரு முகவராகவும் இருக்கிற வாடகைத்தாய் கூறினார்.

வாடகைத்தாய் பெண்களில் சிலர் தங்களுக்கு ஏற்பட்ட நிலைமை ஒரு ''தண்டனை'' என்றும், மீண்டும் தங்களது கருப்பையை ஒருபோதும் வாடகைக்கு விடப்போவதில்லை என்றும் சொன்னார்கள். ஆனால், பெரும்பாலான பெண்கள் தங்களது ''விதிப்படி'' ஏற்பட்ட கடமையை சரியாக நிறைவேற்றியதாக மகிழ்ச்சி தெரிவித்தனர்.

மருத்துவமனைகள்/மருத்துவர்கள், வாடகைத்தாய் பெண்கள், அவர்களை வாடகைக்கு அமர்த்திய தம்பதிகள் ஆகியோரிடையே முக்கியமான தொடர்பாளர்களாக முகவர்கள் அல்லது தரகர்கள் செயல்பட்டுள்ளனர். வாடகைத்தாய்களாக செயல்பட வாய்ப்புள்ள பெண்களைச் சந்தித்துப் பேசுவதற்கு உதவக்கூடியவர்களுடன் இந்த முகவர்கள் நல்ல தொடர்பு வைத்திருக்கிறார்கள்.

இந்த முகவர்கள் தங்களுக்கு இது தொடர்பான அனைத்து விவரங்களும் முழுமையாகத் தெரியும் என்பதுபோல் காட்டிக்கொண்டார்கள். மருத்துவர்களுடனும், வாடகைத்தாய்களை நாடிவரும் தம்பதிகளுடனும் இவர்கள்தான், வாடகைத்தாய் பெண்களின் சார்பாக ஒப்பந்தங்கள் குறித்து பேச்சு நடத்துகிறார்கள். ஏழைப் பெண்களை ஈர்த்து, தங்களது கருப்பைகளை வாடகைக்கு விடத் தூண்டுவது பணம்தான். இந்தப் பெண்களுக்கு தவணை முறையில்தான் பணம் வழங்கப்படுகிறது. இந்தப் பெண்களுடன் ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் ரூ.3000 முதல் ரூ.4000 வரை முன்பணமாகத் தரப்படுகிறது. மருந்துச் செலவுகள், ஸ்கேன் உள்ளிட்ட சோதனைச் செலவுகள், ஊசிகளுக்கான செலவுகள் மற்றும் இதர மருத்துவ செலவுகள் அனைத்தையும் இவர்களை நாடும் தம்பதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

வாடகைக்குவிடும் பெண்ணின் கருப்பைக்குள் முதிராத முட்டைக்கருவுயிர் செலுத்தப்படுகிறது. இதைத் தொடர்ந்து வெற்றிகரமாக அவருக்கு கர்ப்பம் உண்டாகுமானால், அவருக்கு ரூ.30,000 முதல் ரூ.35,000 முதல் தரப்படுகிறது. குழந்தை பிறந்த பிறகு, ரத்தத் தொடர்புள்ள பெற்றோரிடம் குழந்தையை ஒப்படைத்த பிறகு அந்தப் பெண்ணுக்கு ஒப்பந்தப்படி மீதித்தொகை வழங்கப்படுகிறது. இவற்றுடன் அந்தப் பெண்ணுக்கான போக்குவரத்து, உணவு போன்ற செலவுகளையும், சில

நேரங்களில் வாழ்க்கைச் செலவுகளையும்கூட குழந்தையின் ரத்த உறவுப் பெற்றோர் ஏற்கிறார்கள்.

வாடகைத்தாய் பெண்களுக்கு இவ்வாறு தவணைமுறையில் பணம் தருவதன் மூலம் அவர்கள் ஏதேனும் ஒரு வகையில் ஒப்பந்தத்தை மீறக்கூடிய வாய்ப்பு தடுக்கப்படுகிறது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஒப்பந்தம் செய்துகொண்ட பெண்களில் சிலர் முன்தொகையைப் பெற்றுக்கொண்ட பிறகு தொடர் சிகிச்சைகளுக்காக வருவதில்லை என்று மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்தார்கள். சில பெண்கள் கருக்கலைப்பு செய்துவிடுவதாகவும் கூறப்படுகிறது. இதையெல்லாம் தடுப்பதற்காக சில மருத்துவமனைகள் இந்தப் பெண்களின் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை வாங்கி வைத்துக்கொள்கின்றன. குழந்தை பிறந்து, ரத்த உறவுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும் வரையில் அந்த அடையாள அட்டைகளை நிர்வாகங்களே வைத்துக் கொள்கின்றன. முகவர்களைப் பொறுத்தவரையில் ஒரு ஒப்பந்தத்திற்கு ரூ.15,000 முதல் ரூ.20,000 வரை வழங்கப்படுகிறது. இந்தத் தொகையை அவர்கள், எந்த மருத்துவமனைகளுக்காக ஏற்பாடு செய்து கொடுத்தார்களோ அந்த நிர்வாகங்களிடமிருந்தே பெறுகிறார்கள்.

**முடிவுகள்**

கருப்பையை வாடகைக்கு விட முன்வரும் பெண்கள் அவர்களது மோசமான சமூகப் பொருளாதார நிலைமை காரணமாக எளிதில் சுரண்டலுக்கு உள்ளாகக் கூடியவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலும் கல்வியறிவு அற்றவர்களான இவர்களுக்கு சிக்கலான மருத்துவ நடைமுறைகள், அவர்களது உடலில் மேற்கொள்ளப்படவிருக்கும் சிகிச்சை தொடர்பான விவரங்கள், கர்ப்பமான பின் ஏற்படக்கூடிய பாதிப்புகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வது அவர்களுக்குக் கடினமாக இருக்கிறது. பெரும்பாலான நேரங்களில் வயிற்றில் வளரும் குழந்தையை முறையாகப் பராமரிக்க வேண்டும், பிரசவத்துக்குப் பிறகு குழந்தையின் ரத்த உறவுப் பெற்றோரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று மட்டுமே சொல்லப்படுகிறது. அந்தப் பெண்ணின் உடல் நலத்திற்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகள் குறித்து பேசப்படுவதில்லை. செயற்கையாக கருத்தரிப்பதால் ஏற்படக்கூடிய சிக்கல்களையும், அதனால் விளையக் கூடிய உடல்நல பாதிப்புகளையும் தாமதமாகவே இந்தப் பெண்கள் உணர்கிறார்கள்.

பாலினம், இனம், சாதி, மதம், வர்க்கம், இனக்குழு, தேசம் என எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இந்தத் தொழில் இருக்கிறது. மேல்மட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து வருகிற வசதியான தம்பதியர், உள்நாட்டைச் சேர்ந்த மருத்துவமனைகளின் பணக்கார உரிமையாளர்கள் ஆகியோர் உள்ளனர்; இடைமட்டத்தில் மருத்துவத் தொழில் சார்ந்தோர், முகவர்கள்/தரகர்கள் இருக்கிறார்கள்; அடிமட்டத்தில் கருப்பையை வாடகைக்கு விடும் ஏழைப் பெண்கள் இருக்கிறார்கள். சமுதாயத்தின் அடித்தட்டைச் சேர்ந்த ஒரு பெண் இத்தகைய ஒரு பணக்கார மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறாள், அவளைச் சுற்றிலும் பெரிய மருத்துவர்களும் பணக்காரத் தம்பதியும் இருக்கிறார்கள் என்கிறபோது அந்தப் பெண் தனது சொந்த சமூக நிலை பற்றி யோசிக்கிற மன நிலைக்குத் தள்ளப்படுகிறாள். பேச்சு வார்த்தை நடத்தவோ, கேள்வி கேட்கவோ, கலந்தாலோசிக்கவோ தனக்குள்ள திறனை அந்தப் பெண் விட்டுக்கொடுக்க வேண்டியதாகிறது. வாடகைக்கு அமர்த்தும் தம்பதியர் வெளிநாட்டவர்கள் என்றால், அவர்கள் அங்கு இருப்பதே இந்தப் பெண்களை யோசிக்க விடாமல் கடத்திவிடுகிறது.

இந்தப் பெண்கள் ஓரளவுக்கு முகவர்களுடன் நெருக்கமாக இருக்கிறார்கள். ஆனால், பெரும்பாலான முகவர்களும் கல்வியறிவு அற்றவர்கள்தான் என்பதால் அவர்களால் இந்த மருத்துவ நடைமுறைகளைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. இதுகுறித்த முழு தகவல்களும் முகவர்களுக்குத் தெரியாது என்பது நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது. பெரும்பாலான ART மருத்துவமனைகள் இந்த சிகிச்சை வெற்றி பெறுவதற்குக் குறைவான வாய்ப்புகளே உள்ளன என்பதையோ, ஒன்றுக்கு மேற்பட்ட கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பது பற்றியோ, குறைபாடுள்ள சிசுக்கள் வளரக்கூடிய வாய்ப்பு பற்றியோ எதுவும் சொல்வதில்லை. மாறாக, இந்தப் பெண்களை சம்பந்தப்பட்டவர்களை ஈர்ப்பதற்காக தவறான மருத்துவ நெறியை மீறிய தகவல்களைச் சொல்கின்றன. தில்லி, மும்பை நகரங்களைச் சேர்ந்த 100 வாடகைத்தாய் பெண்களிடம் சமூக ஆய்வு மையம் (CSR) 2013ல் ஒரு ஆய்வு நடத்தியது. இத்தகைய பெண்களில் பெரும்பாலோர், தங்களை வாடகைக்கு அமர்த்துகிற தம்பதிகளோடு, குறிப்பாக சிகிச்சையின் தொடக்க கட்டத்தில், தொடர்பு கொள்வதில்லை என்பதை அந்த ஆய்வு காட்டுகிறது.

வாடகைக்கு அமர்த்துகிற தம்பதிகள் வெளி நாட்டவர்களாக இருப்பார்களானால், முதல் மூன்று மாதங்களுக்குப் பிறகுதான், அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியாவுக்கு வருகிறபோது இதுகுறித்துத் தெரிவிக்கப்படுகிறது. வாடகைக்கு

அமர்த்தும் தம்பதிகளுக்கும், வாடகைத்தாய் பெண்களுக்கும் குறுக்கே மருத்துவர்களும் முகமைகளும் மருத்துவமனைகளும் தடைச் சுவர்களாய் இருப்பதாக அந்த ஆய்வு கூறுகிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் நேருக்கு நேராக தொடர்பு கொண்டுவிட்டால் இடைப்பட்ட தரகர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதாயத்தின் அளவு குறையக்கூடும் என்ற அச்சம். ஆகவே, மருத்துவமனைகளில் சொல்லப்படுவதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக வாடகைத்தாய் பெண்கள் இருக்கிறார்கள்.

**வாடகைத்தாய் தொழில்நுட்பம் நிச்சயமாக, ஒரு மிகச்சிறந்த மருத்துவக் கண்டுபிடிப்புதான். உயிர் என்ற பரிசை வழங்கக்கூடியதுதான். ஆனால், மனித நேய மாண்புகளிலிருந்து வர்த்தக நோக்கத்திற்கும், பணம் செய்கிற நோக்கத்திற்கும் மாற்றப்படுவது ஆழ்ந்த கவலைக்குரியது. இந்தியா போன்ற ஒரு ஏழை நாட்டில் சட்டங்களும் விதிகளும் உருவாக்கப்பட்ட பிறகும் ஏழைப் பெண்கள் ஏமாற்றப்படுகிற வாய்ப்புகள் அதிகம்.**

2014 அக்டோபரில் பெங்களூரு நகரைச் சேர்ந்த ஒரு மருத்துவமனையில் உரிமையாளர், வாடகைத்தாய் மோசடியிலும், ஆள்கடத்தலிலும் ஈடுபட்டதற்காகவும் கைது செய்யப்பட்டார். ரூ.3.5 லட்சம் பணத்திற்காக அந்த மருத்துவமனை நிர்வாகம், ஒரு வாடகைத்தாய்க்குப் பிறந்த குழந்தையை 7 மாதங்கள் கழித்து ரத்த உறவுப் பெற்றோரிடம் ஒப்படைத்தது. ஆனால், பின்னர், அந்தக் குழந்தையின் மரபணு சோதனையில், வாடகைக்கு அமர்த்திய தந்தையின் மரபணுவோடு அது பொருந்தவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பிரிட்டன், ஆஸ்திரேலியா, பிரேசில், நியூசிலாந்து, இஸ்ரேல், ஹாலந்து ஆகிய நாடுகளில் பொதுவான அக்கறை உள்ளவர்களுக்கு இடையே மட்டுமே இந்த வாடகைத்தாய் ஏற்பாடு செய்யப்படுகிறது. வாடகைக்கு அமர்த்தும் தம்பதியினரின் நெருங்கிய உறவினர்களாக உள்ள பெண்கள்தான் வாடகைத்தாய்களாக செயல்பட முன்வருகிறார்கள். அன்பின் வெளிப்பாடாகவும், பரிவின் காரணமாகவும், குழந்தையற்ற தம்பதிக்கு உதவ வேண்டும் என்ற நல்ல எண்ணம் காரணமாகவும் இவ்வாறு அந்தப் பெண்கள் முன்வருகிறார்கள். இங்கே பணம் முக்கியத்துவம் பெறுவதில்லை என்பதால், சம்பந்தப்பட்ட பெண்கள் சுரண்டலுக்கு உள்ளாகிறார்கள் என்ற பிரச்சனை எழுவதில்லை. ஆனால், இந்தியாவில் இதில் வர்த்தக நோக்கம்தான் ஆதிக்கம் செலுத்துகிறது. பணக்கார தம்பதியர் மட்டுமே இந்த மருத்துவ சேவையை பயன்படுத்திக்கொள்ள முடியும். தங்களது கருப்பையை வாடகைக்கு விடும் பெண்களுக்கோ இது அவர்களது பொருளாதாரப் பிரச்சனைக்கு ஒரு சிறு தீர்வு, அவ்வளவுதான்.

வாடகைத்தாய் பெண்ணின் மகப்பேறு நலனும் ஒட்டுமொத்த உடல் நலனும் முக்கியமானவை. ஆனால், தற்போதைய ஏற்பாடுகளில் இந்தப் பெண்களின் நலனும் ஆரோக்கியமும் மிக அரிதாகவே கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆகப்பெரும்பாலும், அவர்களது வயிற்றில் வளர்கிற சிசுக்களின் ஆரோக்கியத்தில் மட்டுமே அக்கறை காட்டப்படுகிறது.

கர்ப்பத்திற்கு முன்பும், கர்ப்ப காலத்திலும் வாடகைத்தாய் பெண்களின் உடல்நலப் பிரச்சனைகள் ஒருபுறமிருக்க, பிரசவத்திற்குப் பிறகு பல்வேறு சிறிய, பெரிய பிரச்சனைகள் உள்ளன. பிரசவத்துடன் தொடர்புள்ள தொற்றுநோய்கள், பிறப்புறுப்புடன் இணைந்த பகுதிகளில் வலி, ரத்தப்போக்கு, கடுமையான மலச்சிக்கல், மன உளைச்சல், சீரற்ற சிறுநீர்ப்போக்கு, சீரற்ற மலப்போக்கு, மார்பக அடைப்பு உள்ளிட்ட பிரச்சனைகள் பிரசவத்திற்குப் பின்பு ஏற்படுகின்றன. மார்பக அடைப்பு பிரச்சனை சில நேரங்களில் மார்பகத் தொற்றுநோய்க்கும் இட்டுச் செல்லக்கூடும். உதாரணமாக, குழந்தை பிறந்த பிறகு, இரண்டாவது நாளுக்கும் ஐந்தாவது நாளுக்கும் இடையே பால் கசிவு அதிகரிக்கக்கூடும். இதனால், மார்பகங்கள் கடினமாகக் கூடும். தொடர்ந்து பலமுறை குழந்தைக்குப் பால் கொடுக்காமல் இருந்தாலோ, போதுமான அளவுக்கு பாலை வெளியேற்றாமல் இருந்தாலோ மார்பக அடைப்பு ஏற்படக்கூடும். போதிய அளவிற்கு தாய்ப்பால் கொடுக்கவில்லை என்றால், பால் சுரப்புகளில் அடைப்பு ஏற்படுகிறது என்றால் நிலைமை மோசமாகக்கூடும்.

சிறு வலியும் ஏற்படலாம், தாங்கமுடியாத வலியாகவும்

மாறலாம். இதுவும் தொற்றுநோய்க்கு வழிவகுக்கலாம். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க முடியாத வாடகைத்தாய்களுக்கு நிச்சயமாக இது ஒரு பிரச்சனைதான். இதையொட்டி பல கேள்விகள் எழுகின்றன. வாடகைத்தாய் சிகிச்சை நடைமுறைகள் முற்றிலுமாக முடிவடைந்த பிறகு, அந்தப் பெண்ணின் ஆரோக்கியத்திற்கு யார் பொறுப்பேற்பது? பிரசவத்திற்குப் பிந்தைய மருத்துவச் செலவுகளுக்கு யார் பணம் கொடுப்பது? சிகிச்சைக் காலத்திலோ அதற்குப் பிறகோ அந்தப் பெண்ணிற்குக் கடுமையான உடல்நலச் சிக்கல்கள் ஏற்படுமானால் என்ன செய்வது? அந்தச் சிக்கல்களால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுமானால் என்ன செய்வது? வாக்களிக்கப்பட்ட தொகை வாடகைத்தாய்க்குத் தரப்படவில்லை என்றால் என்ன செய்வது? முறையான தகவல்களைத் தெரிவிக்காமல் இருப்பது, முறையான ஒப்பந்தம் இல்லாமல் வாடகைத்தாயாக அமர்த்துவது, மற்றவர்கள் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்குவது போன்றவை தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அத்தகைய நிலைமைகள் ஏற்படுமானால் இந்தப் பெண்களோ, அவர்களது குடும்பத்தினரோ நியாயம் கேட்டு யாரை அணுகுவது? அவர்களது சந்தேகங்களைப் போக்குவதற்கோ, அச்சங்களைக் களைவதற்கோ, உணர்ச்சிப்பூர்வமாக ஆதரவு அளிப்பதற்கோ யார் இருக்கிறார்கள்?

அண்மையில் ஒரு வாடகைத்தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தபோது, ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த தம்பதி, ஒரு குழந்தையை ஏற்றுக்கொள்ள மறுத்தது செய்தியாக வந்தது. அந்தத் தம்பதிக்கு ஏற்கனவே ஒரு குழந்தை இருப்பதாகவும், எதிர்ப்பாலினத்தில் ஒரு குழந்தை வேண்டுமென எதிர்பார்த்ததால் வாடகைத்தாய் ஏற்பாட்டைச் செய்து கொண்டதாகவும் அந்தச் செய்தி தெரிவித்தது. தன்னை நண்பர் என்று கூறிக்கொண்ட ஒரு நபர், அந்த கைவிடப்பட்ட குழந்தையை தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டார். ஆனால், இதில் பணம் கைமாறியிருப்பதாக ஆஸ்திரேலிய தூதரகம் சந்தேகப்பட்டது.

2014 ஜூலையில், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இன்னொரு தம்பதி, தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு வாடகைத்தாய்க்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தையைக் கைவிட்டனர். அந்தக் குழந்தைக்கு மூளை வளர்ச்சி குறைவாக இருந்ததே காரணம். பின்னர், வாடகைத்தாயை அமர்த்திய ரத்த உறவு தந்தை குழந்தைகளை பாலியல் அத்துமீறலுக்கு உட்படுத்தியதற்காக சிறைத்தண்டனை பெற்றவர் என தெரியவந்தது. இவ்வாறு நமது கவனத்திற்கு வரும் தகவல்களும், கவனத்திற்கு வராத பல தகவல்களும் வாடகைத்தாய்க்குப் பிறக்கும் குழந்தையின் உரிமைகள் குறித்தும், பாதுகாப்பு குறித்தும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகின்றன.

மகப்பேறு வாய்ப்பு இல்லாத தம்பதியருக்கு உதவுகிற ஒரு மருத்துவக் கண்டுபிடிப்புதான் வாடகைத்தாய் தொழில்நுட்பம். ஆனால், நடைமுறையில், கண்டிப்பாக குழந்தை வேண்டும் என்ற நிலையில் உள்ள, ஆனால் உடலியல்ரீதியாக அதற்கு வாய்ப்பில்லாத தம்பதிகளில் ஒருசிலர்தான் இதைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தாங்கள் கர்ப்பம் அடைவதைத் தவிர்ப்பதற்கான ஒரு வழியாகவும் சிலர் இதனைப் பயன்படுத்துகிறார்களா என்பது தெரியவர வேண்டும். ஏற்கெனவே தங்களுக்கு நேரடியாகப் பிறந்த குழந்தைகள் உள்ள சிலர், இன்னொரு குழந்தை என விரும்பியபோது கர்ப்பம், பிரசவம் என்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக வாடகைத்தாய்களை அமர்த்தியதாக செய்திகள் வந்துள்ளன. உண்மையிலேயே இது ஒரு மிகப்பெரிய சுரண்டல்தான். நிச்சயமாக இது முறைப்படுத்தப்பட்டாக வேண்டும்.

வெளிநாட்டவர்கள் வாடகைத்தாய் ஏற்பாட்டைச் செய்துகொள்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதால் உள்நாட்டில் இதிலுள்ள சுரண்டல் அம்சங்கள் தடுக்கப்பட்டுவிடுமா? வெளிநாட்டுத் தம்பதிகளுக்குத் தடை விதிப்பது நிச்சயமாக இந்தியாவில் வாடகைத்தாய் சந்தையை பெருமளவுக்குக் குறைக்கும்தான். குறுகிய காலத்தில் பெரும் பணம் பார்க்கிற மருத்துவமனைகள், முகவர்கள், ஏன் வாடகைத்தாய் பெண்களும்கூட கடுமையான நிலைமைகளை சந்திக்க நேரிடும். இந்தியாவில் வர்த்தகரீதியான வாடகைத்தாய் ஏற்பாடுகளுக்கான தேவைகள் குறையக்கூடும். ஆனால், பாதிக்கப்படும் பெண்களின் உடல்நலன் பொருளாதாரம், சட்டம் மற்றும் அறநெறி சார்ந்த பிரச்சனைகள் தொடரவே செய்யும்.

புதிய வழிகாட்டல்களுக்கான மையமாக வாடகைத்தாய் பெண்கள்தான் இருக்கிறார்கள் என்கிறபோது, அவர்களது கண்ணோட்டத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டாக வேண்டும். இதில் நிச்சயமாக ஒரு வெளிப்படைத்தன்மை தேவை. ஒப்பந்தம் செய்துகொள்கிற தம்பதியர், வாடகைத்தாய் பெண்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மற்றவர்களது உரிமைகள், கடமைகள் குறித்த விதிகளும் நடைமுறைகளும் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். சிக்கலான நிலைமைகள் ஏற்படுகிறபோது சம்பந்தப்பட்டோர்களது பொறுப்புகள் என்ன என்பதும் வழிகாட்டல்களில்

வரவேற்கப்பட வேண்டும். ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முன்பாகவும், சிகிச்சைக் காலத்திலும், குழந்தை பிறந்த பிறகும் சம்பந்தப்பட்ட வாடகைத்தாய்கள், வாடகைக்கு அமர்த்தும் தம்பதியர் உள்ளிட்ட அனைவரது பின்னணிச் சோதனைகள், முறையான கலந்தாய்வுகள் ஆகியவை சட்டப்பூர்வமாக கட்டாயமாக்கப்பட வேண்டும். வாடகைத்தாய் பெண்கள் எவ்விதத் தயக்கமும் இன்றி ஆலோசகர்களை சுதந்திரமாக நாடக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

சிகிச்சையின் ஒவ்வொரு கட்டம் குறித்தும், ஏற்படக்கூடிய சிக்கல்கள் குறித்தும், பக்க விளைவுகள் குறித்தும், உடல்நலப் பிரச்சனைகள் குறித்தும் வாடகைத் தாய்களுக்கு புரிய வைத்தல் வேண்டும். விரிவான தகவல்கள் கிடைத்த பிறகு, சம்பந்தப்பட்ட பின் தனது ஒப்புதலைத் தெரிவிக்க முடிவு செய்வதன் அடிப்படையில்தான் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட வேண்டும். வாடகைத்தாயாக முன்வருகிற பெண்ணுக்கும் அவரது கணவருக்கும், ஒப்பந்த விவரங்கள், நிபந்தனைகள் அனைத்தும் அவர்களது மொழியிலேயே விளக்கப்படுவது சட்டப்பூர்வமாக கட்டாயமாக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தில் குழந்தையின்மை சிகிச்சை மருத்துவர், மனநல மருத்துவர் அல்லது ஆலோசகர், சட்டப்பூர்வமானவர், அரசாங்க அதிகாரி, முகவர் ஆகியோரது பெயர்களும், சிகிச்சை நடைபெறும் மருத்துவமனையின் பெயரும், வாடகைத்தாய், அவரது கணவர், ஒப்பந்தம் செய்துகொள்ளும் தம்பதியர் ஆகியோரது பெயர்களோடு சேர்த்து பதிவு செய்யப்பட வேண்டும். வாடகைத்தாய் பெண்ணுக்கு ஒப்பந்த நகல் வழங்கப்படுவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ART சட்ட முன்வரைவில் வகுத்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கு மருத்துவ ஆலோசனை மையங்களும், மருத்துவமனைகளும் கட்டுப்பட்டு நடப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். விதிகளை மீறுவோர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சட்ட முன்வரைவில் ''கட்டாயக் காப்பீடு'' என்ற சொற்கள் உள்ளன. ஆனால், இது வாடகைத்தாய் பெண்களுக்குத் தெரியாது. இதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் உணர்வதில்லை. இதன் காரணமாக பல மருத்துவமனைகள், தங்களது நிதிப் பொறுப்பிலிருந்து நழுவுவதற்கு இதைப் பயன்படுத்திக்கொள்கின்றன. வாடகைத்தாய்களுக்கான காப்பீடு கட்டாயமாக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மருத்துவமனையும் இதனை உறுதிப்படுத்த வேண்டும். வாடகைத்தாய்களின் உரிமைகளை மட்டுமல்லாமல், வாடகைத்தாய் முறையில் பிறக்கிற எந்த ஒரு குழந்தையும் கைவிடப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் விதிகளில் அதிகபட்ச கவனம் செலுத்தப்பட வேண்டும். வாடகைத்தாய் முறையில் குழந்தைகளை பாலின அடிப்படையிலோ, நோய் காரணமாகவோ, வேறு காரணங்களுக்காகவோ கைவிடக்கூடிய ஒப்பந்தத் தம்பதியர் மீது கறாரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஒட்டுமொத்த அமைப்பு முறையாகச் செயல்படுவதை கண்காணிப்பதற்கான ஒரு ஆளுமை அமைப்பு இருக்க வேண்டும். வாடகைத் தாய்களுக்கு உரிய தகவல்களை அளிப்பது, அவர்களது உடல்சார்ந்த கல்வியை அளிப்பது, தங்களது உரிமைகள் குறித்தும் கடமைகள் குறித்தும் அவர்கள் தெரிந்து கொள்ளச் செய்வது ஆகிய செயல்கள் இந்த ஆளுமை அடைப்பின் பிரதான பணிகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

வர்த்தரீதியான வாடகைத்தாய் முறை, கர்ப்பம் தரிப்பது என்பதை முன்னெப்போதும் இல்லாத வகையில் சந்தைக்குக் கொண்டு வந்திருக்கிறது. குடும்பம் தொடர்பான கோட்பாடுகளையும், அடிப்படையான உறவுகளையும் சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. வாடகைத்தாய் தொழில்நுட்பம் நிச்சயமாக, ஒரு மிகச்சிறந்த மருத்துவக் கண்டுபிடிப்புதான். உயிர் என்ற பரிசை வழங்கக்கூடியதுதான். ஆனால், மனித நேய மாண்புகளிலிருந்து வர்த்தக நோக்கத்திற்கும், பணம் செய்கிற நோக்கத்திற்கும் மாற்றப்படுவது ஆழ்ந்த கவலைக்குரியது. இந்தியா போன்ற ஒரு ஏழை நாட்டில் சட்டங்களும் விதிகளும் உருவாக்கப்பட்ட பிறகும் ஏழைப் பெண்கள் ஏமாற்றப்படுகிற வாய்ப்புகள் அதிகம். சுயநல வர்த்தக நோக்கங்கள், போதுமான சட்டப் பாதுகாப்பின்மை, உரிய விதிகள் உருவாக்கப்படாத நிலைமை. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அதிகரித்துவரும் தேவைகள் ஆகியவை வர்த்தக வாடகைத்தாய் ஏற்பாட்டை லாபம் கொழிக்கும் தொழிலாக மாற்றியுள்ளன. அதேநேரத்தில் ஏழ்மையில் உள்ள, கல்வியறிவு அற்ற பெண்களுக்கு பெரும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளன. வாடகைத்தாய் இப்போது தேவைப்படுவது வர்த்தக வாடகைத்தாய் முறைக்கு தடை விதிப்பதல்ல, மாறாக உரிய சட்டத்தை இயற்றுவதும் அதனைக் கறாராகச் செயல்படுத்துவதுமே ஆகும்.

**(கட்டுரையாளர்கள் ரிதிகா முகர்ஜி, டி.வி.சேகர் இருவரும் மும்பையிலுள்ள பன்னாட்டு மக்கள் அறிவியல் ஆய்வு நிறுவனத்தில் மக்கள் தொகை மற்றும் திட்டங்கள் துறையில் பணியாற்றுகிறார்கள்)**

# சிறுமிகளை சிறையிடுங்கள்?

– கல்பனா சர்மா

*குழந்தைகள் வேற்று மனிதர்களால் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுவதில்லை. மாறாக அவர்களுக்குத் தெரிந்த மனிதர்களாலேயே வன்முறையைச் சந்திக்கிறார்கள் என்பது அரசியல்வாதிகளுக்கு ஞாபகப்படுத்தப்பட வேண்டும். பிரச்சனை நமது வீடுகளுக்குள்ளும், அருகாமையிலும் குடும்பத்திற்குள்ளும் உள்ளது. இத்தகைய மறைக்கப்பட்ட இடங்களில் காவல்துறையோ சட்டங்களோ நுழைய முடியாது.*

இரண்டு வாரங்களுக்கு முன்பு என் வீட்டின் அருகிலுள்ள குடிசைப் பகுதியில் வாழும் பெண் என்னைக் காண வந்திருந்தார். அவர் மிகவும் தொந்தரவுக்குள்ளான மனநிலையில் இருந்தார். அவருக்கு அதிகாலையில் பள்ளி சென்று மதியம் திரும்பும் ஒன்பது வயதான ஒரு பேத்தி இருக்கிறாள். பல நாட்கள் மதிய உணவு சாப்பிட்டவுடன் அந்தக் குழந்தை ஆழ்ந்த உறக்கத்துக்கு சென்று விடும். ஒரு நாள் அவளுடைய அம்மா துணி துவைத்துக்கொண்டிருந்த போது வழக்கம்போல அந்தக் குழந்தை அசந்து தூங்கிவிட்டது. எதேச்சையாக அவளுடைய அம்மாவிற்கு ஏதோ சத்தம் கேட்டது. உள்ளே வந்து பார்த்ததில் பக்கத்து வீட்டில் உள்ள 14 வயது சிறுவன் தனது பேண்டை கழற்றி குழந்தையின் மீது படுத்திருந்தான். அந்தக் குழந்தையின் உள்ளாடை ஏற்கனவே உருவப்பட்டிருந்தது. இதைக் கண்ட அம்மா சத்தம்போட்டவுடன் அந்தப் பையன் வெளியே ஓடிவிட்டான். தனக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே அந்தக் குழந்தை விழித்துக் கொண்டது.

தான் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தார் அந்தக் குழந்தையின் பாட்டி. காவல்துறைக்கு புகார் அளிக்க வேண்டுமா? அந்தப் பகுதியில் அவ்வாறு புகார் அளித்த பலருக்கு எந்தப்பலனும் கிடைக்கவில்லை. அந்தச் சிறுவனின் அம்மாவிடம் சொன்னபோது அவர் அதை மறுத்தார். ஒரு வேளை அந்த சிறுமியின் தந்தை அந்த சிறுவனை அடித்திருக்க வேண்டுமோ? ஆனால் அவர்கள் இவரது பக்கத்து வீட்டுக்காரர். பல வருடங்களாக அவர்கள் ஒன்றாக அருகருகில் வாழ்ந்து வருகிறார்கள். தனது பேத்தியை இந்த சிறுவனிடமிருந்தும் அல்லது பிறரிடமிருந்தும் எவ்வாறு பாதுகாப்பாள் அந்தப் பாட்டி. ஏனென்றால் அந்தப் பாட்டியும் அந்த சிறுமியின் அம்மாவும் வீட்டு வேலை செய்கிறவர்கள். அந்த சிறுமி பல நேரம் தனியாக இருக்க வேண்டிவரும். அந்த சிறுமி தனியாக இல்லாதவாறு எவ்வாறு அவர்கள் பார்த்துக்கொள்ள முடியும்? எவ்வளவு நாள்? இத்தகைய கேள்விகளுக்கு எளிதான மற்றும் நம்பிக்கை தரும் விடையில்லை. தனியான அல்லது பாதுகாப்பான வாழிடம் இல்லாத பல பெண்கள் சிறு வயதோ அல்லது வயது வந்தவர்களோ பாலியல் தொந்தரவுக்கு அதிகம் உட்படுகிறார்கள் என்ற உண்மைக்கு இந்தப் பெண் ஒரு சான்று. மேலும் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது வெளியாட்களால் அல்ல. ஆனால் தெரிந்த மற்றும் அவர்களுடனேயே வாழும் நபர்களால்தான் நடக்கிறது.

டெல்லியில் சமீபத்தில் நடந்த இரண்டு குழந்தைகளின் மீதான பாலியல் வல்லுறவு சம்பவங்கள் எனக்கு மேற்கண்ட சம்பவத்தை நினைவுபடுத்தின. இத்தகைய பாலியல் வல்லுறவுகள் புதிதல்ல. டெல்லியில் மட்டும் கடந்த வருடத்தில் 12 வயதிற்கு குறைவான 199 குழந்தைகள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். இவற்றுள் 71 பேர் 6 வயதிற்கும் குறைவானவர்கள். நாடு முழுவதும் 2014ல் சுமார் 2000 குழந்தைகள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். அதில் 547 பேர் 6 வயதிற்கும் குறைவானவர்கள்.

இத்தகைய கடுமையான புள்ளிவிவரங்கள் நமக்கு முழு உண்மையையும் தெரிவிக்கவில்லை. ஆனால் முன்பைவிட அதிகமான குழந்தைகள் தொடர்பான பாலியல் வன்புணர்ச்சி வழக்குகள் வந்த வண்ணம் உள்ளன. குழந்தைகளை பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 வந்த பிறகு அது பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் உள்ளதே இதற்குக் காரணம். இத்தகைய சட்டம் முக்கியமான முதல்படி. ஆனால் அது முதல்படி மட்டுமே, முடிவல்ல. எப்படியோ இந்த விசயத்தை நமது அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். எனவே சிறுமிகள் பாலியல் வன்புணர்ச்சி தொடர்பான செய்திகள் வெளிவந்தவுடனேயே டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் மத்திய அரசைக் குறை சொல்லத் தொடங்கினார். பாரதிய ஜனதா கட்சி டெல்லியில் பெண்களைப் பாதுகாப்பாக வைக்கவில்லை என்று கெஜ்ரிவாலை குறை கூறினர். இரண்டு தரப்பினருமே பிரச்சனையின் ஆழத்தைப் பார்க்கவில்லை. இன்னும்



http://www.catholic.org/files/images/ins_news/201510530 1ind-p.jpg

அதிகமான காவல் இத்தகைய பிரச்சனைகளை நிறுத்தும் என்று இரு தரப்பினரும் நம்புகிறார்களா ? குழந்தைகளின் பாலியல் வன்புணர்ச்சியை தடுப்பதற்கு இன்னும் நமக்கு எத்தனை காவலர்கள் தேவைப் படுகிறார்கள் ? திரு.கெஜ்ரிவால் பரிந்துரைத்தபடி 14 வயது சிறுவர்களை வயது வந்தவர்களாகக் கருதி அதற்கேற்ப தண்டித்தால் ஏதாவது வித்தியாசம் இருக்குமா ? அல்லது குடும்பங்கள் இத்தகைய குற்றங்களை மறைக்குமா ?

பெண்களின் பாதுகாப்பு அல்லது பாதுகாப்பின்மை பெரிய பிரச்னையின் ஒரு சிறிய பகுதி. தண்டனைக்கு உட்பட மறுக்கும் தன்மை மேலோங்கி இருக்கும் ஒரு சமூகமாக நாம் ஏன் இருக்கிறோம் என்பதைக் கேள்விக்குள்ளாக்க வேண்டும். சிறியதோ பெரியதோ குற்றம் செய்தவர்கள் தப்பிக்க முடியும் என்று ஒவ்வொருவரும் நம்புகின்றனர். போக்குவரத்து விதியை மீறுபவர்களிடமிருந்து பணம் பெறும் காவலரிலிருந்து மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்கள் வரை, குழந்தைகளைப் பாலியல் தொந்தரவு செய்கிறவர்கள் அனைவரும் அதிலிருந்து தப்பித்து விடலாம் என்று நம்புகின்றனர்; அவ்வப்போது அவ்வாறே செய்கின்றனர். மிகவும் ஏழ்மையான அல்லது சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே மாட்டிக் கொள்கிறார்கள். உதாரணத்திற்கு, குடிசைப் பகுதியில் ஏதாவது பிரச்சனை என்றால் அங்கிருக்கும் இசுலாமியர்களையே காவல்துறை கைது செய்யும் என்று நான் பேசிக்கொண்டிருந்த பெண் கூறினார்.

இந்த அசிங்கமான உண்மைக்கு மத்தியில் தீர்வுதான் என்ன ? நமது பெண் குழந்தைகளை அவர்களின் நலனுக்காக நாம் பூட்டி வைக்க வேண்டுமா ? அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் நாம் கண்காணிக்க வேண்டுமா ? இத்தகைய செயல்கள் அவர்களை தன்னம்பிக்கை கொள்ளச் செய்யுமா அல்லது சிறைபட்ட உணர்வைத் தருமா ?

குழந்தைகள் வேற்று மனிதர்களால் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுவதில்லை. மாறாக, அவர்களுக்குத் தெரிந்த மனிதர்களாலேயே வன்முறையைச் சந்திக்கிறார்கள் என்பது அரசியல்–வாதிகளுக்கு ஞாபகப்படுத்தப்பட வேண்டும். பிரச்சனை நமது வீடுகளுக்குள்ளும் அருகாமையிலும் குடும்பத்திற்குள்ளும் உள்ளது. இத்தகைய மறைக்கப்பட்ட இடங்களில் காவல்துறையோ சட்டங்களோ நுழைய முடியாது.

ஆண் குழந்தைகள் வளர்க்கப்படும் முறையிலிருந்து மாற்றம் துவங்கப்பட வேண்டும். ஆணாதிக்க மனப்பான்மையோடு கூடிய அவர்களின் சிந்தனை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். தேவைப்பட்டால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகள் உள்ளன என்பதை ஒப்புக்கொள்ளும் வகையில் அவர்கள் மூளைச் சலவை செய்யப்பட வேண்டும்.

இத்தகைய குற்றங்களை முடிவுக்கு கொண்டுவர குறுக்கு வழி இல்லை.

ஆதாரம் : தி இந்து, 25.10.2015

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsfoundation.org.in*